நுகர்வோர் மன்றங்களுக்கான கையேடு

நுகர்வோர் மன்றம்

CC

அறிந்திரு! விழித்திரு!! செயல்படு!!!

உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை
தமிழ்நாடு அரசு
இணையதளம்: consumer.tn.gov.in

நுகர்வோர் மன்ற நோக்கம்

1. இளைஞர்களிடையே நுகர்வோர் உரிமைகள் குறித்த அறிவையும், திறமைகளையும் உருவாக்குவது.

2. பொருட்களின் தரக்கட்டுப்பாடு விதிகள் மற்றும் சந்தையறிவு பற்றி கற்றுக் கொடுப்பது.

3. நுகர்வோர் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்த சட்டங்களைப் பயிற்றுவிப்பது.

4. சட்டவிரோதமான வணிக முறைகளால் நுகர்வோர் பாதிக்கப்படுவதை தவிர்ப்பது குறித்து இளைஞர்களிடையே விழிப்புணர்வை வளர்ப்பது.

5. நிலைத்த தன்மை வாய்ந்த நுகர்வு முறைகளை பயிற்றுவிப்பதும் அவற்றை அன்றாட வாழ்வில் செயல்படுத்துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

6. இளைஞர்களிடையே அறிவார்ந்த வாங்கும் திறனை மேம்படுத்துவது.

நுகர்வோர் மன்றங்களுக்கான கையேடு

வெளியீடு:

உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை
தமிழ்நாடு அரசு
எழிலகம், சேப்பாக்கம், சென்னை-600 005.
போன் : 044 - 2859 2255, 2858 3139, 2858 3222
மின்அஞ்சல் : ccs@tn.gov.in
இணையதளம் : consumer.tn.gov.tn

முகவரிகளும் தொலைபேசி எண்களும்

1. செயலர், உணவு கூட்டுறவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை,
   தலைமை செயலகம், சென்னை - 600 009.
   தொலைபேசி : 044 -25672224

2. ஆணையர், உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
   எழிலகம், சென்னை - 600 005.
   தொலைபேசி : 044 -28592255
   மின் அஞ்சல் : ccs@tn.gov.in

3. கூடுதல் ஆணையர், உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை,
   எழிலகம், சென்னை - 600 005.
   தொலைபேசி : 044 - 28583139
   மின் அஞ்சல் : adccs@tn.gov.in

இணைய தளங்கள்

1. தேசிய ஆணையம் : http://ncdrc.nic.in/
2. நுகர்வோர் கூட்டமைப்பு : http://www.core.nic.in/
3. CERC நிறுவனம் : http://www.cercindia.org/

கருத்தாக்கம் மற்றும் வடிவமைப்பு : **திரு. மா. விஜயகுமார்**
துணை ஆணையர்,
உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

தமிழாக்கம் : **திருமதி. ஜெ. விஜயதிலகம்** (மற்றும்)
திரு. ஆ. இசக்கியப்பன்
உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை : **திரு. க. ராஜாராமன்,** இ.ஆ.ப.
கூடுதல் ஆணையர்,
உணவு பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

நுகர்வோர் மன்றங்களுக்கான கையேடு

பொருளடக்கம்

I. முன்னுரை ____ 3

II. நுகர்வோர் மன்றங்களின் குறிக்கோள் ____ 4

III. நுகர்வோர் மன்றங்களை உருவாக்குதல் ____ 5

IV. நுகர்வோர் மன்றங்களின் அமைப்பு ____ 6

V. நுகர்வோர் மன்றங்களின் செயல்பாடுகள் ____ 7

VI. நுகர்வோர் மன்ற உறுப்பினர்களின் கடமைகள் ____ 8

VII. ஒருங்கிணைப்பு நிறுவனம் ____ 8

VIII. ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் பங்கு ____ 8

IX. நிதி உதவி ____ 10

X. சிறந்த நுகர்வோர் மன்றங்களுக்கான பரிசுகள் ____ 12

XI. ஒருங்கிணைப்பு நிறுவனங்கள் சமர்ப்பிக்கும் முன்மொழிவுகளுக்கான வழிகாட்டிகள் ____ 13

XII. மன்றத்தின் ஆசிரியர் – ஒருங்கிணைப்பாளருக்கான வழிகாட்டிகள் ____ 14

XIII. ஒருங்கிணைப்பு நிறுவனங்களுக்கான வழிகாட்டிகள் ____ 15

XIV. நுகர்வோர் மன்றங்களின் நடவடிக்கைகள் (பயிற்சி கட்டகம் / மாதாந்திரக் கூட்டம்) ____ 16

1) ஆசிரியர் – ஒருங்கிணைப்பாளருக்கான அணுகுமுறை கட்டகம் – விழிப்புணர்வு / பயிற்சி நுணுக்கங்கள் ____ 16

2) மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும், தகவல்களைப் பரப்ப பயன்படுத்தும் உபகரணங்கள் / முறைகள் / பயிற்றுக்களம் / கட்டகம் ____ 18

3) நுகர்வோர் இயக்கம் ____ 19

4) நுகர்வோர் உரிமை மீறல்கள் ____ 20

5) நுகர்வோர் உரிமைகள் ____ 21

6) நுகர்வோர் பொறுப்புகள் ____ 22

7) நுகர்வோர் சட்டம், நுகர்வோர் ஆணையம் / நீதிமன்றம் மற்றும் சொற்பொருள் விளக்கங்கள் ____ 22

8) உணவு – பாதுகாப்பு மற்றும் தரம் ____ 22

9) மருந்துகள் – கட்டுப்பாடு மற்றும் வரன்முறை ____ 24

10) வியாபாரம் – வணிக நயம் (பொருள் ஆய்வு மற்றும் விளம்பரம்) ____ 25

11) நிலைத்த தன்மை வாய்ந்த நுகர்வு ____ 25

12) நுகர்வோரின் குறைகள் மற்றும் தீர்வு ____ 27

13) உணவு கலப்படம் – சோதனை வைத்து செய்முறை விளக்கம் ____ 30

14) தர உத்திரவாதம் – தரக்கட்டுபாடு விதிகள் ____ 30

15) சந்தையில் பொருட்களை எவ்வாறு வாங்குவது? ____ 31

16) போக்குவரத்து விதி மற்றும் நடைமுறைகள் – சமிக்ஞைகள் மற்றும் குறியீடுகள் ____ 33

17) நுகர்வோர் குழுக்களுடன் கலந்துரையாடல் ____ 34

XV. நுகர்வோர் மன்றங்களின் சுய சார்பு இயக்கம் ____ 34

<u>**இணைப்பு**</u>

I. படிவங்கள் ____ 35

II. நுகர்வோர் மன்றம் பெயர் பலகை மற்றும் குறியீட்டுச் சின்னம் ____ 41–42

III. நுகர்வோர் மன்ற வருடாந்திர நடவடிக்கைகளின் மாதிரி அட்டவணை ____ 43

IV. ஒருங்கிணைப்பு நிறுவனங்களுக்கான தகுதி நிபந்தனைகள் ____ 45

V. போக்குவரத்து குறியீடுகள் ____ 47

VI. போக்குவரத்து சமிக்ஞைகள் ____ 50

VII. தகவல் சமிக்ஞைகள் ____ 54

முகவுரை

பொதுவாக, ஒரு ஜனநாயக நாட்டில், சட்டம், சமுதாய அமைப்புகளால் கோரப்படுவதும், நிர்வாகத்தினரால் உருவாக்கப்படுவதும், மக்கள் பிரதிநிதிகளால் இயற்றப்படுவதும், நீதித் துறையால் பாதுகாக்கப்படுவதுமேயாகும். 'குடிமக்களின் நலன்' என்ற உறுதியான கொள்கைதான் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளையும் மற்றும் சமுதாய தொண்டு நிறுவனங்களையும் செயல்பட உதவுகிறது. மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளின் மூலமாக எதிர்பார்க்கப்படும் சமூக மாற்றம் மற்றும் ஒட்டு மொத்த விழிப்புணர்வு ஏற்பட வாய்ப்பு உண்டு.

'நுகர்வோர் மன்றம்' திட்டத்தின் மூலம் சமூக தொண்டு நிறுவனங்களின் தொண்டாற்றும் ஆர்வத்தையும் மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் இணைத்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இயலும்.

'நுகர்வோர் மன்றங்களுக்கான கையேடு' நுகர்வோர் மன்றங்கள் செயல்பட ஒரு வழிகாட்டியாக திகழும். நுகர்வோர் மன்றத்தின் செயல்பாடுகள், அணுகுமுறை குறித்த அடிப்படையான கட்டகங்களை (Modules) பகுதி–14ல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இந்த கையேடு மூலம், மாணவர்களிடையே நுகர்வோர் பிரச்சனைகள் மற்றும் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த முடியும். ஒவ்வொரு உபதலைப்பும் உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டப்பட வேண்டும். அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்கள் மற்றும் உண்மை நடப்புகளை சொல்வதன் மூலம் நுகர்வோர் மன்ற உறுப்பினர்களிடையே சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

இணைப்பு–IIIல் கண்ட நுகர்வோர் மன்றத்தின் மாதிரி வருடாந்திர அட்டவணையை முன் மாதிரியாக எடுத்துக் கொண்டு, நுகர்வோர் மன்றம் விரும்பும் மேலும் சில பணிகளை இணைத்துக் கொள்ள வேண்டும். மாதிரி அட்டவணையில் காட்டப்பட்டவைகளை தவிர வேறு ஏதேனும் தலைப்பு மிகவும் பொருத்தமாக இருந்தால் அதனையும் எடுத்துக் கொள்ளலாம்.

வரையறுக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் வர்ணங்களை மாற்றாமல் நுகர்வோர் மன்றத்தின் பலகை மற்றும் குறியீட்டுச் சின்னம் அமையப் பெற்று பிரதிபலிக்கப்பட வேண்டும்.

நுகர்வோர் மன்றத்தின் கொள்கையான “அறிந்திரு!”, “விழித்திரு!!”, மற்றும் “செயல்படு!!!” ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பிரபலப்படுத்தும் எண்ணத்துடனேயே நுகர்வோர் மன்றத்தின் செயல்பாடுகள் இருக்க வேண்டும்.

தமிழக அரசு, வருங்கால பாரதத்தின் குடிமகனை ஒரு அறிவார்ந்த நுகர்வோராக உருவாக்கும் வாகனமாக நுகர்வோர் மன்றத்தை அமைப்பதில் முனைப்பாக இருக்கின்றது.

ஆணையாளர்
உணவுபொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

நுகர்வோர் மன்றங்களுக்கான கையேடு

I. முன்னுரை

பிறந்தது முதல் நமது வாழ்நாள் முழுவதும் நாம் அனைவரும் நுகர்வோர்களாக இருக்கிறோம். நாம் உணவு, மருந்து வகைகள், துணி வகைகள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் தொலைபேசி வசதி, உள்ளாட்சி அமைப்புகளின் சேவை போன்ற பல்வேறு சேவைகளை பயன்படுத்துகிறோம். இந்தியக் குடிமகன் என்கிற முறையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இன்னும் பிற சட்டங்கள் நமக்கு நிறைய உரிமைகளை அளித்துள்ளது. நுகர்வோர் என்ற முறையில் நமது உரிமைகள் யாவை என நமக்குத் தெரியுமா? நுகர்வோர் பாதுகாப்புக்கு உருவாக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் வரன்முறைகள் நமக்கும் தெரியுமா? ஒரு கடையில் பொருளை வாங்கும்போது நாம் எந்த அளவிற்கு விழிப்புணர்வுடனும் சிரத்தையுடனும் அதை வாங்க வேண்டும் என்பது தெரியுமா? நம்முடைய கடின உழைப்பின் மூலம் ஈட்டிய வருவாயில் வாங்கப்படும் பொருள் மற்றும் சேவை தரமற்றதாகவோ அல்லது தரம் குறைந்ததாகவோ நமக்கு கொடுக்கப்படும்போது நமது உரிமையை எவ்வாறு நிலை நிறுத்துவது என்பது குறித்து தெரியுமா? நமது நுகர்வோர் கடமைகள் பற்றி நம்மிடையே விழிப்புணர்வு உள்ளதா?

இவ்வினாக்களின் விடைகள் மூலம் நம் மத்தியில் நிலவும் முயற்சியின்மையும், அறியாமையையும் எடுத்துக்காட்டும் இந்நிலையை மாற்றுவோம்! ஒவ்வொரு முறை பொருட்களை வாங்கும்போது, பொருள்களை பற்றியுள்ள விவரம் தெரியாமல் இருப்பதினால் நம் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு பாதுகாப்பின்மையையும் இன்னல்களையும் உண்டாக்குகிறோம் என்பதனை நாம் உணர வேண்டும். ஒவ்வொரு முறையும் நாம் வாங்கும் பொருட்களின் தரக்குறைவு அல்லது மோசமான சேவையை பொருட்படுத்தவில்லையெனில், நம்மைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான நுகர்வோர் அதே பொருளை வாங்குவதன் மூலம் பல இன்னல்களுக்கும், நஷ்டத்திற்கும் ஆளாவதுடன் தயாரிப்பாளருக்கும் அநியாய லாபம் சென்றடைகிறது. நாம் அனைவரும் இவ்விஷயத்தில் கடமை உணர்வு மிகுந்தவர்களாகவும், பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாகவும் இருப்போமாக. அது எப்படி என்பதை நாம் அறிவோமா?

இந்திய அரசின் நுகர்வோர் பாதுகாப்பு, உணவு மற்றும் பொதுவிநியோக அமைச்சகத்தின் கீழ் இயங்கும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மற்றும் தமிழக அரசின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையும் மாநிலத்தின்

நுகர்வோர் நலன் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான பல்வேறு விஷயங்களை கவனிக்கும் ஒருங்கிணைப்புத் துறைகளாக செயல்பட்டு வருகின்றன. நம்நாட்டில் வலுவான மற்றும் பரவலான நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களுடன், **முறைசாரா முன்மாதிரி திட்டமாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு நுகர்வோர் கல்வி** வழங்கி மாணவர்களை நுகர்வோர் நலன் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நுகர்வோர் மன்றங்களை ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. ஆகவே நுகர்வோர் மன்றத்தின் அன்பார்ந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவ உறுப்பினர்களே! நாம் நுகர்வோர் இயக்கத்தினை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றுவோம்!!

II. நுகர்வோர் மன்றங்களின் குறிக்கோள்கள்:

சுதாரிப்பான, விழிப்பான நுகர்வோர்களாலும் மற்றும் பொறுப்பான, நியாயமான வியாபாரிகளாலும் நிறைந்த நேர்மையான வணிகத்தில் ஈடுபடும் இந்திய வியாபார ஸ்தலங்கள் என்பது நம் தொலைநோக்கு பார்வை.

நம் இயக்கத்தின் குறிக்கோள்:

அ) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 மற்றும் இதர இந்திய சட்டங்களில் உள்ள உரிமைகளையும், பொறுப்புகளையும் மாணவர்களுக்கு கற்பித்தல்.

ஆ) ஒரே அணியாக குழந்தைகளை ஒன்று திரட்டி உள்ளூர் சமுதாயத்துடன் இணைத்து நல்ல குடிமக்களாக வாழ கற்றுகொடுத்தல்.

இ) இளைஞர்களுக்கு ஊக்கமளித்து, நம்பிக்கையை அவர்களுக்குள் வளர்த்து நுகர்வோர் உரிமைகள் மீறப்படும்போது நியாயத்திற்கு போராட வைத்தல்.

ஈ) எதார்த்த வாழ்வின் சூழலை உணர்த்தி அதன் மூலம் எதிர்கால வாழ்க்கையில் நுகர்வோர் பிரச்சினைகளை கையாளும் அறிவை வளர்த்தல்.

உ) தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் நுகர்வோர் இயக்கத்தை வலுப்படுத்துதல்.

III. நுகர்வோர் மன்றங்களை உருவாக்குதல்:

அரசால் அங்கீகரிக்கப்பட்ட நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளிலும்/பதிவு செய்யப்பட்ட கல்லூரிகள்/பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளிலும் நுகர்வோர் மன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும். அரசு உதவி பெறும் அல்லது உதவிபெறாத கல்வி நிறுவனங்கள், தொழில்சார்ந்த அல்லது கலை அல்லது சமுதாயக் கல்லூரிகளிலும் நுகர்வோர் மன்றங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதிக அளவிலான மாணவர்களை சென்றடைவதுதான் இதன் நோக்கம் ஆகும்.

உள்ளூர் சமுதாயத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் சுய உதவிக்குழு கூட்டமைப்புகளின் பங்கு பிரதானமாக அமைவதால், இக்கூட்டமைப்புகளும் நுகர்வோர் மன்றங்களாக செயல்படலாம்.

நுகர்வோர் மன்றங்கள் உருவாக்குதலில் கீழ்க்கண்ட விஷயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அ) பள்ளி/கல்லூரி/சுய உதவிக்குழு கூட்டமைப்புகளுக்கு நேரடியாக விஜயம் செய்து நுகர்வோர் மன்றம் உருவாக்கப்படுவதற்கான நோக்கத்தினை விரிவாக எடுத்துரைத்தல்.

ஆ) திறமை வாய்ந்த தொண்டு செய்ய விரும்பும் ஆசிரியரை ஒருங்கிணைப்பாளராக நியமனம் செய்ய வேண்டும். இரண்டு தலைமை பண்புள்ள மாணவர்களை மாணவ ஒருங்கிணைப்பாளர்களாக கண்டறிதல் அவசியம் சுய உதவிக்குழுக்களாக இருப்பின், அதன் கூட்டமைப்பில் இரண்டு நல்ல தலைவிகளை நுகர்வோர் ஒருங்கிணைப் பாளர்களாக செயலாற்ற கூட்டமைப்பே முன் மொழியலாம்.

இ) ஆசிரிய / மாணவர் / கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர்கள் ஆர்வத்துடன் செயல்படும் 50 மாணவர்களை/சுய உதவிக்குழு உறுப்பினர்களை மன்றத்தில் சேர்த்து தொடர் நடவடிக்கைகளில் பங்கு பெறச் செய்ய வேண்டும்.

ஈ) இதற்கு பின் மன்றத்தின் முதல் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மன்ற குறிக்கோள்கள், நுகர்வோர் இயக்கம், நுகர்வோர் உரிமைகள், எதார்த்த வாழ்வில் நுகர்வோர் உரிமை மீறப்படுவது மற்றும் விதிகள் குறித்து முறையான பயிற்சி அளித்தல் அவசியம். இப்பயிற்சி ஒரு

நாள் முழுவதும் பள்ளி/கிராமத்தில் வைத்து வழங்கப்படலாம். தேவையான வரைபடங்கள், ஒளிக்குறுந்தகடு (VCD) மற்றும் பயிற்சிப் பொருள்களை பயன்படுத்தி பயிற்சியை பள்ளி / கல்லூரி, சுய உதவிக்குழு கூட்டமைப்பு இயங்கும் ஊரிலே / கிராமத்திலே நடத்தப்பட வேண்டும். பங்கேற்பு முறையிலான பயிற்சி அளிப்பதன் மூலம் நல்ல விழிப்புணர்வுடன் கூடிய நிலைத்த தன்மையுடன் மன்றங்கள் செயலாற்றக்கூடும். பகுதி XIV –ல் பயிற்சி முறைகளும் கட்டகங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

உ) ஒவ்வொரு மன்றத்திற்கும் தீர்மானப்பதிவேடு (Minutes Book) மற்றும் வங்கி கணக்கு(Bank Account) மன்றத்திற்கு அத்தியாவசியமானது. வங்கி கணக்கானது ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பள்ளி தலைமையாசிரியர் இருவரும் இணைந்து இயக்கும் இணைகணக்காக (Joint Account) இருக்கு வேண்டும்.

ஊ) நுகர்வோர் மன்றத்தின் பெயர் பலகை இணைப்பு–IIல் கண்டபடி பள்ளியில் அமைக்கப்பட வேண்டும்.

IV. நுகர்வோர் மன்றங்களின் அமைப்பு:

- ஒரு பள்ளி/கல்லூரி/கிராமத்தில் ஒரே ஒரு நுகர்வோர் மன்றம் அமைக்க வேண்டும்.
- அரசு அங்கீகாரம் பெற்ற, மாணவர்கள் அதிகமுள்ள நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளின் மாணவர்கள் (ஆறாம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்பில் பயிலும்) / பல்கலைக் கழகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட கல்லூரியில் பயிலும் கல்லூரி மாணவர்கள் இந்த நுகர்வோர் மன்றத்தின் உறுப்பினராக இருக்கலாம். மருத்துவ, சட்ட, பொறியில் கல்லூரிகளிலும் நுகர்வோர் மன்றங்கள் அமைக்க வேண்டும்.
- சுய உதவிக்குழு கூட்டமைப்புகள் கிராம அளவிலான நுகர்வோர் மன்றங்களாக உருவாக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு மன்றமும் குறைந்தது 50 உறுப்பினர்களைக் கொண்டதாயிருக்க வேண்டும். உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு அதிகபட்ச உச்சவரம்பு கிடையாது.

– பள்ளி/கல்லூரியில் நுகர்வோர் பாதுகாப்பில் ஈடுபாடு உள்ள ஒரு ஆசிரியர் இம்மன்றத்தின் பொறுப்பாளராக இருப்பார். இவர் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் என அழைக்கப்படுவார்.

V. நுகர்வோர் மன்றங்களின் செயல்பாடுகள்:

நுகர்வோர் மன்றங்கள் சில வரையறுக்கப்பட்ட நடவடிக்கைகளின் . மூலம் பலப்படுத்தப்பட வேண்டும். நன்றாக செயல்படும் மன்றங்கள் புதுமையான முயற்சிகளை மேற்கொள்ளலாம். பின்வரும் அடிப்படை வரையறுக்கப்பட்ட நடவடிக்கைகள் மன்றங்கள் இயங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றன :

அ) பிரதி மாதமும் முதல் வியாழக்கிழமைகளில் பள்ளி வேலை நிறைவுபெற்றபின் மன்றத்தின் மாதாந்திரக் கூட்டங்கள் மற்றும் விளக்கங்கள் ஒரு மணி நேரத்திற்கு நடத்தப்பட வேண்டும். பிரதி மாதமும் இணைப்பு III ல் உள்ள மாதிரி அட்டவணைப்படி ஏதேனும் ஒரு தலைப்பை எடுத்து மன்றம் நடத்தப்பட வேண்டும்.

ஆ) தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நுகர்வோர் தொடர்புடைய தினங்கள் பள்ளி/கல்லூரிகளில் கொண்டாடப்பட வேண்டும். அத்தினங்களில் பள்ளி அளவிலான பேச்சுப்போட்டி/ கட்டுரைப் போட்டி ஆகியவை நுகர்வோர் மன்றங்களால் நடத்தப்பட வேண்டும்.

இ) வருடத்தில் குறைந்தது நான்கு நாட்களில் மன்ற உறுப்பினர்கள் உள்ளூர் சந்தைகளுக்கும் நுகர்வோர் நீதிமன்றங்களுக்கும் விஜயம் செய்வதோடு உள்ளூர் வசிப்பிடங்களில் சென்று நுகர்வோர் நாடகங்கள் நடத்துதல், செயல்முறை விளக்கக் கூட்டம் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யலாம். இவையாவும், முன்னதாகவே திட்டமிடப்பட்டு நடத்தப்பட வேண்டும்.

ஈ) ஒவ்வொரு கூட்ட மற்றும் பயிற்சி நடவடிக்கையும், ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் மற்றும் மாணவர் ஒருங்கிணைப்பாளரால் மன்ற தீர்மான பதிவேட்டில் உடனுக்குடன் பதிவு செய்யப்பட வேண்டும்.

உ) நுகர்வோர் சம்பந்தப்பட்ட செய்திகளை காட்சிப்படுத்த ஒரு செய்திப் பலகை (Notice Board) நுகர்வோர் மன்றத்தால் பள்ளியில் / கல்லூரியில் / கிராம பொது இடத்தில் பராமரிக்கப்பட வேண்டும். ஆசிரியர் மற்றும் மாணவர்களால் இப்பலகையில் நுகர்வோர் செய்திகள்/விளம்பரங்கள்/ தகவல்கள் ஆகியவை பிரசுரிக்கப்பட வேண்டும்.

VI. நுகர்வோர் மன்ற உறுப்பினர்களின் கடமைகள்:

- நுகர்வோர் மன்ற அனைத்து நடவடிக்கைகளிலும் பங்கேற்றல்.
- நுகர்வோர் மன்றத்தின் மூலம் அறிந்து கொண்ட தகவல்களை சக மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும் பிற மக்களுடன் பகிர்ந்து கொள்ளல்.
- பள்ளிகள் மற்றும் உள்ளூர் பொது இடங்களில் நடைபெறும் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கேற்றல். மற்றும் ஆர்வமுடன் ஏற்பாடு செய்தல்.
- தேசிய நுகர்வோர் தினம் (டிசம்பர் 24ம் தேதி) மற்றும் உலக நுகர்வோர் தினம் (மார்ச் 15ம் தேதி) ஆகிய தினங்களை கொண்டாடுதல்.

VII. ஒருங்கிணைப்பு நிறுவனம்:

நல்லதொரு பெயர் பெற்ற கல்வி நிறுவனம் அல்லது அரசு சாரா தன்னார்வ நுகர்வோர் நல நிறுவனம் அல்லது தொழில்நுட்ப நிறுவனம் இவற்றில் ஏதாவது ஒன்றை நுகர்வோர் மன்றங்களின் ஒருங்கிணைப்பு நிறுவனமாக மாவட்ட ஆட்சித் தலைவர் நியமிப்பார். ஒருங்கிணைப்பு நிறுவனமானது இணைப்பு IV-ல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளுடைய, பெயர் பெற்ற, அனுபவம் வாய்ந்த மற்றும் எதிர்மறையான குறிப்புகள் இல்லாத நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

10க்கும் குறையாத 50க்கும் மேற்படாத நுகர்வோர் மன்றங்களை குழுக்களாக, ஒரு ஒருங்கிணைப்பு நிறுவனம் கண்காணிக்கலாம், மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் ஒருங்கிணைப்பு நிறுவனங்கள் மட்டுமே நுகர்வோர் மன்றங்களின் பணிகளை கண்காணிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மேற்கண்டவாறு ஒருங்கிணைப்பு நிறுவனங்கள் முறையாக தேர்வு செய்யப்படுவதை உறுதி செய்யும்.

VIII. ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் பங்கு

அ) ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திலும் மாதம் ஒரு முறையாவது கூட்டம் நடைபெறுவதை ஊக்குவித்து வழிநடத்த வேண்டும்.

ஆ) நுகர்வோர் மன்றத்தின் நடவடிக்கைகளுக்கு உதவுதல், கடந்த மாதங்களில் நடந்த நிகழ்வுகளை ஆய்வு செய்தல் மற்றும் வரும் மாதங்களுக்குரிய நடவடிக்கைகளுக்கு அட்டவணை தயாரிக்கவும் ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திற்கும் உதவுதல்.

இ) உள்ளூர் பகுதி மக்கள்/பள்ளி மாணவர்கள்/சுய உதவிக்குழுக்கள் பயனடையும் வகையில் நுகர்வோர் மன்றங்களுடன் இணைந்து விளக்கக்கூட்டங்கள் நடத்துதல் மற்றும் தெரு நாடகங்கள் அரங்கேற்றல்.

ஈ) ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திற்கும் தேவையான விளம்பர உபகரணங்கள், துண்டு பிரசுரம், வரைபட அட்டைகள், இதர விளக்கக் குறிப்புகள் வழங்குதல் மற்றும் நிதி ஆதாரங்களை வெளியில் இருந்து திரட்டி ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திற்கும் வழங்குதல்.

உ) ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்தின் நடவடிக்கைகளையும் கண்காணித்து திறன்பட செயல்படுவதற்கு ஆலோசனை வழங்குதல்.

ஊ) ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் பள்ளி/கல்லூரி நிர்வாகம்/ சுய உதவிக்குழுக்கள் இவைகளுக்கு இணைப்பு பாலமாக செயல்படுதல்.

எ) மன்ற நடவடிக்கைகள் துவங்குவதற்கு முன்பாக ஒவ்வொரு ஆண்டும் ஜூன்/ ஜூலை மாதத்தில் ஆசிரியர் மற்றும் மாணவ ஒருங்கிணைப்பாளர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சி அளித்தல்.

ஏ) மாவட்ட/வட்ட/வட்டார அளவில் மன்றங்களுக்கு இடையே கூட்டு நடவடிக்கைகள் மற்றும் போட்டிகள் நடத்த உதவுதல்.

ஐ) வருடாந்திர விவர அறிக்கை தயார் செய்வதற்கும், நுகர்வோர் மன்றத்தினால் செயல்படுத்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு அறிக்கை அளிப்பதற்கு ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திற்கும் உதவுதல்.

ஒ) ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திற்கும், வரவு செலவு கணக்கு தயார் செய்வதற்கும், பயன்பாட்டுச் சான்றினை உரிய படிவத்தில் (படிவம்—ஈ) அளிப்பதற்கும், கணக்குகளின் தணிக்கை அறிக்கையினை ஆண்டு இறுதியில் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு அனுப்புவதற்கும் உதவுதல்.

ஓ) மாவட்ட அளவில் நடைபெறும் நுகர்வோர் மன்றக் காலாண்டு ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்வதுடன் மேற்படி ஆய்வு கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்/ மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலருக்கு உதவுதல்.

IX. நிதி உதவி

நுகர்வோர் நல நிதியில் இருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10,000/– வீதம் ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திற்கும் நிதி உதவியாக நுகர்வோர் பாதுகாப்புத் துறை வழங்கும். இதில் 20% தொகை (ரூபாய் 2000/–) மன்ற ஒருங்கிணைப்பு நிறுவனத்திற்கு, ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திற்கும் பயிற்சி/வழிநடத்துதல் சேவை செலவினமாக வழங்கப்படும். 80% தொகை (ரூபாய் 8,000/–) நுகர்வோர் மன்றத்திற்கு வழங்கப்படும். ஒவ்வொரு ஒருங்கிணைப்பு நிறுவனமும் அந்தந்த நுகர்வோர் மன்றங்களின் செலவினங்களை நிர்வகிக்கும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் நிறுவப்படும் மன்றங்களுக்கு நிதி உதவி வழங்கப்படும். சுய உதவிக்குழுக்களுக்கு தற்போது இத்திட்டத்தின் மூலம் நிதி உதவி வழங்கப்பட இயலாது. ஆயினும் அவர்களுக்கு பின்னர் தமிழ்நாடு மாநில நுகர்வோர் நல நிதியிலிருந்து நிதி உதவி வழங்குவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

நிதி ஒதுக்கீடு செய்வதற்கு, பின்வரும் வழிமுறைகள், சம்பந்தப்பட்ட துறையால் பின்பற்றப்பட வேண்டும்:

அ) மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், ரூ.2000/–க்கான கணக்கில் வழங்கப்படும் காசோலையினை (Account-Payee Cheque) ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் பெயரிலும், ரூ.8000/–க்கான கணக்கில் வழங்கப்படும் காசோலையினை (Account-Payee Cheque) மன்றத்தின் பெயரிலும் வழங்குவார். காசோலை வழங்கும் முன்பு ஒருங்கிணைப்பு நிறுவனம், மன்றத்தின் சேமிப்பு புத்தகம் மற்றும் தீர்மான பதிவேட்டின் புகைப்பட பிரதி மற்றும் தன்னுடைய சேமிப்பு புத்தகத்தின் கணக்கு எண்ணையும் அளித்தல் வேண்டும். நுகர்வோர் மன்றத்தின் கணக்கானது, ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் ஆகிய இருவரின் கூட்டு கணக்காக பராமரிக்கப்படும். ஆசிரியர் மற்றும் மாணவ உறுப்பினரால் கையொப்பமிடப்பட்ட முதல் கூட்ட நடவடிக்கைகளின் (தீர்மான புத்தகம்) நகல், நிதி வழங்கும் அலுவலருக்கு காலாண்டிற்கு ஒரு முறை அளிக்கப்பட வேண்டும்.

ஆ) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சியரால் நடத்தப்படும் நுகர்வோர் மன்ற துவக்க விழாவில் மேற்படி காசோலைகள் ஒருங்கிணைப்பு நிறுவனம் மற்றும் பள்ளி கல்லூரி ஆசிரியர் ஒருங்கிணைப்பாளரிடம் நேரிடையாக (ஒப்புதல் சான்று பெற்றுக் கொண்டபின்) மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும்.

இ) ஒவ்வொரு மன்றத்திற்கும் வழங்கப்படும் ரூ.2000/- நிதி உதவியை ஒருங்கிணைப்பு நிறுவனம் பின்வரும் செலவினங்களை மேற்கொள்ள பயன்படுத்த வேண்டும்.

1) மாவட்ட அளவில், ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் மற்றும் மாணவ ஒருங்கிணைப்பாளருக்கு பயிற்சி அளித்தல்.

2) ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்திற்கும் சிறப்பு பயிற்சியாளர் மூலம் பயிற்சி வழங்குதல்.

3) மன்றத்தின் பயிற்சிக்கு தேவையான பொருட்கள் (Chart/VCD) தயார் செய்தல்.

4) கண்காணிப்பு மற்றும் பயிற்சிக்கான சில்லறைச் செலவுகள்.

ஈ) பள்ளி/கல்லூரி நுகர்வோர் மன்றங்கள் ரூ.8000/-த்தினை பின்வரும் பயனுள்ள வழிகளில் செலவிடலாம்:

1) பள்ளி/கல்லூரி நுகர்வோர் மன்றத்திற்கான வர்ணம் பூசப்பட்ட பலகையினை முதலில் அமைக்க ரூ.500/-க்கு மிகாமல் செலவழிக்கலாம்.

2) நுகர்வோர் மன்றத்திற்கான செய்திப் பலகையினை (Notice Board) அமைக்க ரூ.500/-க்கு மிகாமல் செலவழிக்கலாம்.

3) மாதாந்திரக் கூட்டம் நடத்த கூட்டம் ஒன்றிற்கு ரூ.100/-க்கு மிகாமல் செலவழிக்கலாம்.

4) நுகர்வோர் தினங்களில் நடத்தப்படும் மாணவர்களுக்கான கட்டுரை ஓவியம்/ பேச்சுப் போட்டிகளுக்கான பரிசுத் தொகை ரூ.2000/-க்கு மிகாமல் செலவழிக்கலாம்.

5) சந்தை / நுகர்வோர் நீதிமன்ற விஜயம் மற்றும் விழாக் கூட்டங்கள் ஆகியவற்றிற்கு தலா ஒரு விஜயத்திற்கு ரூ.500/-க்கு மிகாமல் செலவழிக்கலாம்.

6) விளம்பரப் பிரசுரங்கள், விளக்கப்படங்கள் ஆகியவற்றை தயார் செய்வதற்கு ரூ.1000/-க்கு மிகாமல் செலவழிக்கலாம்.

7) சில்லறை செலவினம் / எழுதுபொருள் / அறிக்கை தயார் செய்தல் ஆகியவற்றிற்கு ரூ.1000/-க்கு மிகாமல் செலவழிக்கலாம்.

உ) ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர், தலைமை ஆசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனம் மேற்படி செலவினத்தின் நியாயத் தன்மையினை உறுதி செய்வார்கள். செலவினங்களுக்கான ஒப்புதல் அடுத்த மன்ற கூட்டத்தில் தீர்மானமாக வைத்துப் பெற வேண்டும்.

X. சிறந்த நுகர்வோர் மன்றங்களுக்கான பரிசுகள்

அ) மாவட்ட அளவிலான பரிசுகள்:

ஒரு மாவட்டத்தில் செயல்படும் சிறந்த மூன்று நுகர்வோர் மன்றங்களுக்கு முதல் பரிசாக ரூ.3,000/–மும், இரண்டாவது பரிசாக ரூ.2,000/–மும், மூன்றாவது பரிசாக ரூ.1,000/–மும் வழங்கப்படும். பரிசுக்கான தகுதி, ஒருங்கிணைப்பு நிறுவனம் சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையிலும், அதனை ஆய்வு செய்வதன் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படும். மூன்று சிறந்த நுகர்வோர் மன்றங்களை பின்வரும் மாவட்ட அளவிலான குழு தேர்வு செய்யும்.

1.	மாவட்ட ஆட்சியர்	– தலைவர்
2.	மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்	– உறுப்பினர் செயலாளர்
3.	தலைமைக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட கல்வி அலுவலர்	– உறுப்பினர்
4.	மாவட்ட ஒருங்கிணைப்பாளர், என்.எஸ்.எஸ்.	– உறுப்பினர்
5.	ஒரு ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் பிரதிநிதி	– உறுப்பினர்

வருடந்தோறும் மாநில அரசு வழங்கும் நுகர்வோர் தின நிதியிலிருந்து இப்பரிசுகளுக்கான செலவினங்களை மேற்கொள்ள வேண்டும். பரிசு தொகை சம்பந்தப்பட்ட நுகர்வோர் மன்றத்திற்கு கணக்கில் வழங்கப்படும் காசோலையாக வழங்கப்படும். இந்நிதி பகுதி IX (ஈ)ல் கொடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள கொடுக்கப்பட்டுள்ளது.

ஆ. மாநில அளவிலான பரிசுகள்:

ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் பரிசு பெறும் நுகர்வோர் மன்றம் மாநில அளவிலான குழுவிற்கு அனுப்பப்படும். மாநில அளவிலான குழுவிற்கு உணவுப்பொருள் வழங்கல் துறை ஆணையாளர் தலைவராகவும், கூடுதல் / இணை ஆணையாளர் உணவுப்பொருள் வழங்கல் துறை, மற்றும் துணை ஆணையாளர்–I (உ.பொ.வ.துறை) உறுப்பினர்களாகவும் இருப்பார்கள். மாநில அளவில் தேர்வு செய்யப்படும் முதல் மூன்று நுகர்வோர் மன்றங்களுக்கு ரூ.5000/–ம், ரூ.4000/–ம் மற்றும் ரூ.3000/–ம் பரிசாக வழங்கப்படும். இந்தப் பரிசுகள் ஒவ்வொரு ஆண்டும் மாநில நுகர்வோர் நல நிதியிலிருந்தும் வழங்கப்படும்.

இ. தேசிய அளவிலான பரிசு:

நாட்டின் சிறந்த நுகர்வோர் மன்றத்திற்கு ரொக்கத் தொகையாக மத்திய அரசால் ரூ.5,000/– வழங்கப்படும். இந்த தேசிய அளவிலான பரிசிற்கு, மாநிலத்தின் 3 சிறந்த மன்றங்களை உணவுப் பொருள் வழங்கல் ஆணையாளர், இந்திய அரசிற்கு தமிழக அரசு மூலம் பரிந்துரை செய்வார்.

XI. ஒருங்கிணைப்பு நிறுவனங்கள் சமர்ப்பிக்கும் முன்மொழிவுகளுக்கான வழிகாட்டிகள்:

அ) இணைப்பு–IVல் உள்ள தகுதி நிபந்தனைகளுக்கு உட்பட்ட தன்னார்வ நுகர்வோர் நல நிறுவனம்/ அரசு சாரா மற்றும் அரசு சார்ந்த கல்வி நிறுவனம் மட்டுமே நுகர்வோர் மன்றங்கள் அமைப்பதற்கு முன் மொழிவுகள் சமர்ப்பிக்கலாம். இணைப்பு–IVல் கூறப்பட்ட தகுதி நிபந்தனைகளை தவிர, முன் மொழிவுகளை அனுப்பும் நிறுவனத்திற்கு சொந்த கட்டமைப்பு மற்றும் தனியே செயல்படும் திறன் இருக்க வேண்டும். அரசாங்க நிதியுதவியை தவிர தன் சொந்த முயற்சியில் நுகர்வோர் மன்றங்களுக்கு தேவையான நிதியுதவி அளித்திட முன் வர வேண்டும்.

ஆ) இணைப்பு–Iல் (படிவம்–அ) கண்டுள்ள குறிப்பிட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பத்துடன், நுகர்வோர் நல நிதி விதிகள் மற்றும் வழிகாட்டிகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதர ஆவணங்கள் இணைத்திட வேண்டும்.

இ) புதிய நுகர்வோர் மன்றங்கள் அமைப்பதற்கான முன்மொழிவுகள் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதல் மார்ச் வரையிலும், ஏற்கனவே நிறுவப்பட்ட நுகர்வோர் மன்றங்களுக்கு இரண்டாம் கட்ட உதவியை நீட்டித்தலுக்கான முன்மொழிவுகள் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இம்முன்மொழிவுகள் ஆணையர் அலுவலகத்திற்கு 30.4.2005க்குள் சமர்பிக்க வேண்டும். இம்முன்மொழிவுகளை தமிழக அரசு மூலம் மத்திய அரசிற்கு மே மாதத்தில் அனுப்பப்படும்.

ஈ) ஜூன் 30ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியரால் தேவையான நிதியை ஒப்பளிப்பு செய்யப்படும்.

XII. மன்றத்தின் பொறுப்பு வகிக்கும் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்களுக்கான வழிகாட்டிகள்:

அ) நுகர்வோர் மன்றத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை மாணவர்களுக்கு விளக்குவதுடன் பள்ளி/கல்லூரிகளில் உள்ள நுகர்வோர் மன்றம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் மாணவர்களுக்கு விளக்க வேண்டும்.

ஆ) குறைந்தபட்சம் 50 உறுப்பினர்களை பதிவு செய்து நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து பயிற்சி அளித்தல்.

இ) மாணவர் குறியீட்டுச் சின்னம் (Badge) தயார் செய்து அவற்றை உறுப்பினர்களுக்கு வழங்குதல்.

ஈ) பள்ளி/கல்லூரி நுகர்வோர் மன்ற செய்திப் பலகை (Notice Board) உருவாக்கி அதில் தினந்தோறும் வெளியாகும் நுகர்வோர் சம்மந்தப்பட்ட செய்திகள், கருத்துக்கள், கட்டுரைகள் முதலியவற்றை தினசரி இடம் பெறச் செய்தல்.

உ) மன்ற உறுப்பினர்களுக்கு கூட்டம் எவ்வப்போது நடத்தப்படும் என்ற விபரத்தை தெரிவிப்பதுடன் மன்ற நடவடிக்கைகளையும் தெரிவித்தல் வேண்டும். மேலும் நுகர்வோர் தொடர்பான சிறப்பு விருந்தினர்களை அழைத்து சிறப்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

ஊ) கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தல், கணக்குகள் பராமரித்தல், அறிக்கை தயாரித்தல் ஆகியவற்றில் ஆசிரியருக்கு உதவும் வகையில் இரண்டு மாணவர் தலைவர்களை மன்றத்திற்கு நியமித்தல்,

எ) மன்றத்திற்கு தேவைப்படும் பொருட்களான, வருகைப்பதிவேடு, தாள்கள், நோட்டுப் புத்தகங்கள், கையேடு, மற்றும் இதர பொருட்களை வாங்குதல்.

ஏ) கையேடு மற்றும் வருடாந்திர மாதிரி அட்டவணையின் அடிப்படையில் முழு ஆண்டுக்கும் உரிய மன்ற நடவடிகைகளை திட்டமிட்டு அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். மார்ச்–15ம் தேதி உலக நுகர்வோர் உரிமை தினத்தன்று வருடாந்திர நடவடிக்கைகளை முடித்து வைக்க வேண்டும். மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் காலாண்டு நுகர்வோர்

மன்றங்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். மாதாந்திர நடவடிக்கை அறிக்கை கொடுக்கப்பட்ட படிவத்தில் (படிவம் – ஆ) ஒருங்கிணைப்பு நிறுவனத்திற்கு கொடுக்கப்பட வேண்டும்.

ஐ) பெறப்படும் மான்யத் தொகைக்கு உரிய முறையில் கணக்குகள் பராமித்து அதனை ஒருங்கிணைப்பு நிறுவனத்தின் தணிக்கைக்கு அனுப்ப வேண்டும். (படிவம்–இல் கண்டுள்ளவாறு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும்).

ஒ) கையேடில் உள்ள அனைத்து கட்டகங்கள்/பயிற்சிகள் அனைத்து மாணவ உறுப்பினர்களுக்கும் கற்றுத் தரப்பட வேண்டும். மேலும் நுகர்வோர் தொடர்பான விஷயங்களை விளக்க கூட்டங்கள், வீடியோ புகைப்படங்கள், கட்டுரைகள், மற்றும் தெரு நாடகங்கள் மூலம் விளக்கப்பட வேண்டும்.

ஓ) உறுப்பினர்களின் பங்கேற்பு உறுதி செய்யப்படுவதுடன் மாணவ உறுப்பினர்களின் வினா எழுப்பும் திறன் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

ஔ) மாணவ உறுப்பினர்களின் பங்கேற்பினை ஊக்கப்படுத்தும் வகையில், பொழுதுபோக்கு அம்சத்துடன் கூடிய நடைமுறை பயிற்சி வீட்டுப்பாடமாக அளிக்கப்பட வேண்டும்.

ஃ) தமிழக அரசு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவ்வப்போது பிறப்பிக்கும் உத்தரவுகள் / சுற்றறிக்கைகளை ஒருங்கிணைப்பு நிறுவனம் செயல்படுத்த உதவிட வேண்டும்.

XIII. ஒருங்கிணைப்பு நிறுவனங்களுக்கான வழிகாட்டிகள்

அ) நுகர்வோர் மன்றங்களுக்கு தரமான உதவியும், உரிய வழிகாட்டுதலும் வழங்குதல் அவசியம். நுகர்வோர் மன்றங்களின் எண்ணிக்கையைவிட மன்றத்தின் தரமும் செயல்பாடும் சிறந்ததாக அமைய வேண்டும்.

ஆ) ஆசிரியர்கள்/மாணவ ஒருங்கிணைப்பாளர்களிடம் உரையாடுதல், மன்ற நடவடிக்கைகளை அவர்கள் நல்ல முறையில் செயல்படுத்த தேவையான தகவல்களை அறிந்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

இ) தேவையான பயிற்சி, மற்றும் மன்றத்திற்கான தேவையான பொருட்களை வழங்குதல் அவசியம்.

ஈ) நுகர்வோர் தொடர்பான உலகளாவிய செய்திகளையும், தகவல்களையும் சேகரித்து அவற்றை மன்ற செய்திப்பலகையில் இடம் பெற செய்தல் வேண்டும்.

உ) நுகர்வோர் விழிப்புணர்வினை தம் குடும்ப உறுப்பினர்களிடமும் உள்ளூர்வாசிகளிடமும் ஏற்படுத்தும் வகையில், புதுமையான யுக்திகளைக் கையாள மன்ற உறுப்பினர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை விழிப்புணர்வு பெற்ற நுகர்வோராக்குதல்.

ஊ) உலக நுகர்வோர் தினம் (மார்ச் 15) கொண்டாடுவதற்கு அனைத்து மன்றங்களுக்கும் உதவுதல்.

எ) மன்றத்தின் நடவடிக்கைகளை ஆண்டு முழுவதும் ஆய்வு செய்து, மன்றத்தை மேலும் சிறப்படைய உதவுதல்.

XIV. நுகர்வோர் மன்றங்களுக்கான நடவடிக்கைகள் (பயிற்சி கட்டகம் மற்றும் மாதாந்திர கூட்டம்

1) ஆசிரியர் ஒருங்கிணைப்பாளருக்கான அணுகுமுறை கட்டகம் – விழிப்புணர்வு / பயிற்சி முறைகள்:

அ) மன்றத்தின் பொறுப்பு வகிக்கும் ஆசிரியர், நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான அனைத்து முக்கிய செய்திகளையும் மன்றத்தின் உறுப்பினர்களுக்கு விளக்கி, உறுப்பினர்கள் மூலமாக அனைத்து மாணவர்கள் மத்தியிலும் நுகர்வோர் விழிப்புணர்வு சென்றடையச் செய்தல்.

ஆ) பல்வேறு வகைப்பட்ட மாணவர்களையும் கவரும் வகையில் பலதரப்பட்ட நடவடிக்கைகளையும், யுக்திகளையும் கையாளுதல் (ஒவ்வொருவருடைய இயற்கையான விருப்பத்திற்கு ஏற்ப கற்பித்தல் முறை இருக்க வேண்டும்) புலத் தணிக்கை, விளக்கவுரைகள், படக்காட்சிகள், போட்டிகள், வீட்டுப்பாடங்கள், இணையத்தில் தகவல் (இன்டர்நெட்) தேடுதல், புத்தகம் படித்தல் போன்ற பல வகைகள்.

இ) ஒன்றுக்கு மேற்பட்ட கற்பித்தல் முறைகளை பயன்படுத்துவதன் மூலம் குழந்தைகளும், பெரியவர்களும் இயற்கையாகவே ஆர்வம்/ஈடுபாடு

காட்டுவார்கள். சிறந்த வாய்ப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரும் வகையில் வெவ்வேறு கற்பித்தல் முறையை முயற்சிக்கலாம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் புத்திசாலிதான். அறிவாளி குழந்தைகளில் 8 வகைகள் உள்ளன.

சுய—அறிவு

இவர்கள் தாங்களாகவே சிந்தித்து, ஆராய்ச்சி செய்து கற்றுக்கொள்ள விரும்புவார்கள்.

மக்கள்—அறிவு

இவர்கள் பிறருடன் உரையாடுதல் அல்லது விவாதம் செய்வதன் மூலம் கற்றுக் கொள்ள விரும்புவார்கள்.

தீர்க்கமுறை—அறிவு

இவர்கள் எந்த ஒரு விஷயத்தையும் படிப்படியாக அணுகி வாதம் செய்து அதன் மூலம் கற்றுக் கொள்ள விரும்புவார்கள்.

வார்த்தை—அறிவு

இவர்கள் படிப்பதன் மூலம் அல்லது கவனிப்பதன் மூலம் கற்றுக் கொள்ள விரும்புவார்கள்.

உடல்—அறிவு

இவர்கள் ஏதேனும் ஒரு செயலை தனது உடலால் செய்வதன் மூலம் கற்றுக் கொள்ள விரும்புவார்கள்.

ஒலி—அறிவு

இவர்கள் இசை அல்லது இசை பாடல் மூலம் கற்றுக் கொள்ள விரும்புவார்கள்.

பிம்ப—அறிவு

இவர்கள் ஓவியம் அல்லது கற்பனை உருவங்கள், அல்லது படங்களை உருவாக்குதல்/காட்சி சார்ந்த ஊடகம் முதலியவைகள் மூலம் கற்றுக் கொள்ள விரும்புவார்கள்.

இயற்கை – அறிவு

இவர்கள் இயற்கையின் வடிவம் மற்றும் சுற்றுப்புற சூழலிலிருந்து கற்றுக் கொள்ள விரும்புவார்கள்.

இந்த எட்டு விதமான குழந்தைகளுக்கும் புரியம் வகையில் ஒவ்வொரு தலைப்பிலும் விவாதம் செய்யப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் பயிற்சி முறைகள் அமைய வேண்டும். (உதாரணமாக ஒலி மூலம் கற்றுக் கொள்ள விரும்பும் குழந்தைகளுக்கு இசை/ இசைப்பாடல் மூலம், நுகர்வோர் உரிமையினை அறியச் செய்யலாம். உருவம் மூலம் கற்றுக் கொள்ள விரும்பும் குழந்தைகளுக்கு, விளக்கப்படங்கள் மற்றும் செய்திப்படம் (கார்ட்டூன்) வாயிலாக நுகர்வோர் உரிமையினை / பொறுப்பினை பயிற்றுவிக்கலாம்)

ஈ) ஒவ்வொரு உறுப்பினரின் தனித்தன்மையினை வெளிக் கொணரும் வகையில் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். (உதாரணமாக மாணவரின் தனித் திறமையான ஆடல், பாடல், வர்ணம் தீட்டல், மாதிரிகள் தயார் செய்தல், ரங்கோலி, ஓரங்க நடிப்பு, பல குரல் பேச்சு, நகைச்சுவை கூத்து ஆகியவை மூலம் நுகர்வோர் விஷயங்களை பயிற்றுவிக்கலாம்) நுகர்வோர் மன்றத்தின் அனைத்து நடவடிக்கை விவரங்கள், பல்வேறு திறமைகள், விளக்க வகுப்புகள் மற்றும் இதர நடவடிக்கைகள் யாவும் நுகர்வோர் மன்ற ஆசிரியர் ஒருங்கிணைப்பாளரால் பராமரித்தல் வேண்டும். இதில் சிறந்த இனங்கள் மார்ச் 15ஆம் தேதி நடைபெறும் உலக நுகர்வோர் தின விழா மற்றும் டிசம்பர் 24ல் நடைபெறும் தேசிய நுகர்வோர் தினவிழாவில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

2. மாணவர்கள் மற்றும் பொது மக்களிடம் தகவல்களை கொண்டு சேர்க்கப் பயன்படுத்தப்படும் வழிகள் / உபகரணங்கள் / பயிற்றுக் களம் / கட்டகங்கள்

1. ஓரங்க நாடகங்கள்
2. பாடல் / இசைப்பாடல்
3. நாட்டிய நாடகங்கள் / நாட்டுப்புற மற்றும் பாரம்பரிய நடனங்கள்
4. குறுநாடகம்
5. ஓரங்க நடிப்பு / பலகுரல் பேச்சு / நகைச்சுவை கூத்து
6. ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டுதல் / சுவரொட்டிகள் தயாரித்தல் / ரங்கோலி போட்டிகள்.

7. மன்றக் குழுக்களிடையே வினா விடைப் போட்டி
8. பேச்சுப் போட்டி – குறிப்பிட்ட தலைப்புகளில்
9. உணவு கலப்படத்தை விளக்க சோதனை பெட்டியின் உதவியுடன் விளக்கம்.
10. நுகர்வோர் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு விஜயம்.

3. நுகர்வோர் இயக்கம் :

அமெரிக்காவில் 1966 முதல் 1977 ஆம் ஆண்டுகளுக்கிடையில் 25க்கும் மேற்பட்ட நுகர்வோர் பொருள் தொடர்பான சட்டங்கள் இயற்றப்பட்டன. நுகர்வோர் வரவு பாதுகாப்பு சட்டம், 1972 மற்றும் நுகர்வோர் உற்பத்தி பாதுகாப்பு சட்டம், 1972 ஆகிய சட்டங்கள் இன்றும் அமெரிக்காவின் நுகர்வோரை பாதுகாத்து வருகின்றன. இங்கிலாந்து நாட்டில் 1965 மற்றும் 1987க்கிடையில் பல்வேறு அரசியலமைப்பு சட்டங்கள் நுகர்வோர் பொருள் தொடர்பாக இயற்றப்பட்டன. அவற்றுள் சில முக்கியமான சட்டங்கள் – வாடகை , கடன் கொடுத்தல் சட்டம், 1965 பொருட்கள் விநியோக சட்டம், 1973, பொருட்கள் விற்பனை சட்டம், 1979 நுகர்வோர் வரவு சட்டம், 1973 நியாய வர்த்தகசட்டம், 1973 நுகர்வோர் காப்பு சட்டம், 1978 மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1987.

இந்தியாவில் 1930லிருந்தே பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமான சில சட்டங்கள்:

பொருள்கள் விற்பனை சட்டம், 1930
மருந்து மற்றும் அழகுப்பொருள்கள் சட்டம், 1940
மருந்து கட்டுப்பாடு சட்டம், 1950
இந்திய தர நிர்ணய நிறுவனங்கள் (சான்றிதழ் மதிப்பெண்) சட்டம் 1952 (ஐ.எஸ்.ஐ)
எம்.ஆர்.டி.பி. சட்டம், 1952
அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955
உணவு கலப்படத் தடை சட்டம், 1955
எடை மற்றும் அளவு தர நிர்ணய சட்டம், 1976
இந்திய ஒப்பந்தச் சட்டம், 1976

"காவியட் எம்ப்டர்" (CAVEAT EMPTOR) அதாவது "நுகர்வோரே கவனமாக பொருள் வாங்க வேண்டும்" எனப்படும் சித்தாந்தத்திற்கு கட்டுப்பட்டுதான் இந்திய ஒப்பந்தச் சட்டம்,

1976 உள்ளது. இந்த சித்தாந்தமானது வியாபாரிகளை தாங்கள் செய்யும் குற்றங்களிலிருந்து காத்துக் கொள்ள உதவி வந்தது. அதற்கு ஒப்பந்தத்தில் அவர்களுக்கு சாதகமான சில ஷரத்துகளை சேர்த்துக் கொண்டாலே போதும். இந்த சித்தாந்தத்தால் நுகர்வோர் தங்களை பாதுகாத்து கொள்ள முடியாமல் போனது. இது நுகர்வோரின் நலனுக்கு குந்தகம் விளைவிப்பது போன்றது. ஆகவே நுகர்வோரின் நலனை பாதுகாப்பதற்கு ஒரு தனி சட்டம் தேவைப்பட்டது. இதுவே நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 இயற்றப்படுவதற்கு காரணமாகவும் இருந்திருக்கின்றது. இச்சட்டம் நுகர்வோரை பாதுகாப்பதில் பெரிதும் உதவுகின்றது.

(4) நுகர்வோர் உரிமை மீறல்கள்

இந்தியாவில் உள்ள நுகர்வோரின் பெரும்பாலோர் விதிகள், சட்டங்கள் மற்றும் நடைமுறை விதிகள் குறித்த விபரம் தெரியாதவர்களாகவே உள்ளனர். அவர்களது உரிமைகள் குறித்து அவர்கள் தெரிந்து வைத்துக் கொள்ளவில்லை. இதில் மிகப்பலர் பின்தங்கிய மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள கல்வியறிவு அற்றவர்கள் ஆவர். ஆதலால் சந்தேகக்கண் இல்லாத இந்த எளிய அறியாத மக்களை ஏமாற்றுவதில் உற்பத்தியாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் எந்த கஷ்டமும் இல்லை எனலாம். ஆதலால் நுகர்வோர் நலன் என்பது இன்னும் தேவையான அளவில் இல்லை. பொதுவான நுகர்வோர் விதிமீறல்கள் பின்வருமாறு:

(அ) எடைகுறைப்பு

(ஆ) கலப்படம்

(இ) உரிய பட்டி (Bill) வழங்காமை

(ஈ) மோசமான தரம் வாய்ந்த பொருள்கள், கெட்டுப்போன / பாழான பொருட்கள் வழங்குதல்

(உ) மோசமான பராமரிப்பு சேவை (Poor Service)

(ஊ) ஒப்பந்த வரையறைகளில் ஏமாற்றுதல், ஒப்பந்த உட்பிரிவுகளை மறைத்தல்

(எ) அதிகப்படியான சில்லரை விற்பனை விலையைவிட கூடுதல் விலைக்கு விற்றல்.

(ஏ) கட்டாயப்படுத்தி தேவையற்ற பொருட்களை வாங்க தவறான வழிநடத்துதல்.

(ஐ) தவறாக வழிநடத்தும் விளம்பரங்கள், குறிப்பாக குழந்தைகளை இலக்காக வைத்து விளம்பரம் செய்தல்.

(ஒ) காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல்.

(ஒ) விற்பனைக்குப் பின் தொடர்பு கொள்ள முடியாத போலியான கம்பேனிகள்

(ஔ) கடன் கொள் முதல் வாங்கும் பொருட்களுக்கு அதிகமாக வட்டி விதித்தல்

(ஃ) அபாயகரமான, ஆபத்தான அல்லது பாதுகாப்பற்ற பொருட்கள் வழங்குதல்.

இப்பட்டியல் முடிவற்றது. இப்பொழுது இந்த விதி மீறல்களை எதிர்த்து எவ்வாறு நீதி பெறுவது? நுகர்வோரே ஜாக்கிரதை! நாம் விழிப்புடனும், முன் ஜாக்கிரதையுடனும், புத்திசாலித்தனத்துடனும் இருத்தல் வேண்டும். ஆசிரியர்—பயிற்சியாளர், மாணவர்களிடம் அவர்களுக்குத் தெரிந்த விதி மீறல்களைப் பட்டியலிடச் சொல்லலாம் அவர்களது பெற்றோர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தின் வாயிலான விதி மீறல்களையும். கூறச் சொல்லலாம். தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனங்கள் தங்கள் அனுபவங்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

(5) நுகர்வோர் உரிமைகள்:

நுகர்வோர் உரிமைகள் எட்டு வகையாகும் (நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் மற்றும் ஐ.நா. சபை கூட்டத்தில் வரையறுக்கப்பட்டது).

1) பாதுகாப்பிற்கான உரிமை
2) தகவலிற்கான உரிமை
3) விருப்பத்திற்கான உரிமை
4) பிரதிநிதித்துவத்திற்கான உரிமை
5) குறை தீர்ப்பதற்கான உரிமை
6) நுகர்வோர் கல்விக்கான உரிமை
7) சுகாதாரமான சுற்றுச் சூழலுக்கான உரிமை
(8) அடிப்படைத் தேவைகளுக்கான உரிமை

1962ஆம் ஆண்டு மார்ச்—15 ஆம் தேதியன்று அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜான் எஃப் கென்னடி மார்ச் 15ஆம் தேதி நுகர்வோர் உரிமைகள் தினம் என அறிவித்ததன் அடிப்படையில் நுகர்வோர் உரிமைகள் தினம் கொண்டாடப்பட்டது. அதனை தொடர்ந்து 1973 ஆம் ஆண்டு, மார்ச் 15ஆம் தேதி உலக நுகர்வோர் உரிமைகள் தினமாக தீர்மானிக்கப்பட்டது. மாணவர்களை ஒவ்வொரு உரிமையைக் குறித்தும் விளக்கம் தெரிவிக்கலாம். தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உதாரணங்களுடன் விளக்கலாம்.

6) நுகர்வோரின் பொறுப்புகள்

i) நுண்ணறிவு மற்றும் கண்காணிப்பு
ii) ஈடுபாட்டுடனும் மற்றும் சுறுசுறுப்பாகவும் இருத்தல்
iii) சமூக அக்கறை (நிலைத்தன்மை வாய்ந்த நுகர்வை கையாளுதல்)
iv) சுற்றுச் சூழல் அக்கறை (சுற்றுச் சூழலுக்கு பொறுப்பாகுதல்)
v) இணைந்து செயலாற்றல் (கட்டுக்கோப்பாக இருத்தல்) ஒற்றுமையே பலம் (நீதிக்காக போரிடல்)

அனைத்து மாணவர்களும் 5 குறிப்புகளை வழங்கலாம். "நீங்கள் ஒரு பொறுப்பான நுகர்வோர் எனில் நீங்கள் (i)..."

ஒவ்வொரு குறிப்பின் மீது அவர்கள் எவ்வாறு பொறுப்பான நுகர்வோராக மாற வேண்டும் என்பது குறித்து விவாதித்து கூறலாம்.

(7) நுகர்வோர் சட்டங்கள், நுகர்வோர் ஆணையம் / அவை மற்றும் இதர நுகர்வோர் பாதுகாப்பு நிறுவனங்கள் மற்றும் சொற்பொருள் விளக்கங்கள்

நுகர்வோர் உரிமை மீறல்களை எவ்வாறு சமாளிப்பது என்பதனை மற்ற உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதன் மூலம் அவர்கள் மூலம் பொது மக்களுக்கு இந்த பகுதியின் பத்தி 1ல் கண்ட வழிமுறைகளை பின்பற்றி விளக்கிடலாம்.

இந்த கட்டகம், நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986ல் உள்ள விளக்கங்கள் மற்றும் நுகர்வோர் தொடர்பான இதர விளக்கங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். மாணவர்கள் தங்களுக்கு தெரிந்த நுகர்வோர் தீர்வுகளை பட்டியலிடவேண்டும். பயிற்சியாளர்கள் இந்த கட்டகத்தை மிகுந்த சுவாரஸ்யத்துடன் நுகர்வோர் சட்டங்கள் குறித்து விளக்க வேண்டும்.

8) உணவு – பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயம்

பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் உணவு உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, சேமிப்பு, பங்கீடு மற்றும் விற்பனைக்கு அறிவியல் பூர்வமான தர நிர்ணயம் செய்ய ஏதுவாக உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டம், 2005 தற்பொழுது மசோதா வடிவில் பாராளுமன்றத்தில் இருக்கின்றது. இது சட்டமாக இயற்றப்பட்டால் கீழ்க்கண்ட சட்டங்கள் ரத்து செய்யப்படும்.

i) உணவு கலப்பட தடுப்புச் சட்டம், 1954.

ii) பழ உற்பத்தி பொருட்கள் ஆணை, 1955.

iii) பால் மற்றும் பால் உற்பத்தி பொருட்கள் ஆணை, 1992.

iv) மாமிச உணவு உற்பத்தி பொருட்கள் (கட்டுப்பாடு) ஆணை, 1992

v) காய்கறி எண்ணெய் உற்பத்தி பொருட்கள் (கட்டுப்பாடு) ஆணை, 1947.

vi) உணவு எண்ணெய் பாக்கெட்டிலடைத்தல் (வரன்முறை) ஆணை, 1998.

vii) சால்வண்ட்டிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய், எண்ணெய் எடுக்கப்பட்ட உணவு மற்றும் உணவு மாவு (கட்டுப்பாடு) ஆணை, 1967.

viii) தாய்ப்பால் மற்றும் உணவு பால் புட்டி மற்றும் குழந்தைகள் உணவு (வரன்முறை) சட்டம், 1992.

ix) அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், 1955 கீழ் பிறப்பிக்கப்பட்ட உணவு தொடர்பான இதர ஆணைகள்.

☐ உணவுப் பொருட்கள் வாங்கும் பொழுது நுகர்வோர் பொருளில் ஒட்டப்பட்ட முகப்புச்சீட்டு (Label) மூலம் பின்வரும் விவரங்களை அறிய வேண்டும். மூலப்பொருட்கள், எடை, தயாரிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி, தயாரிப்பு தேதி, சரியாக உபயோகிக்கப்படும் காலம், அணி எண், தர நிர்ணய சான்றிதழை குறிக்கும் முத்திரைகள், அக்மார்க், எஃப்.பி.ஓ., ஐ.எஸ்.ஐ., போன்றவை, சைவமாயின் (பச்சை புள்ளி) அல்லது அசைவமாயின் (சிகப்பு புள்ளி) முதலியன மற்றும் பயன்படுத்தும் முறை, சேமிப்புக்கான அறிவுரைகள். ஒரு பொருளை உதாரணமாக வாங்கி வந்து செயல்முறையில் இதனை விளக்கலாம்.

☐ மாணவர்களிடம், அவர்கள் எவ்வாறு தரமான நல்ல உணவுப் பொருட்களை வாங்குவார்கள் என்பது குறித்து விவாதிக்க சொல்லலாம். (கான்சர்ட், சென்னை என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட உணவு கலப்பட சோதனை பெட்டியை உபயோகித்து பல்வேறு உணவு கலப்படத்தை விளக்கலாம்)

☐ உள்ளூர் உணவு ஆய்வாளர் (மாவட்ட துணை இயக்குனர் – சுகாதாரத்துறை அவர்களை தொடர்பு கொள்ளலாம்), அவரது அனுபவங்களை, பகிர்ந்து கொள்ளச் சொல்லலாம். அவர் எவ்வாறு மோசமான உணவுப் பொருட்கள் விற்பனையினை கண்டறிய உதவுவார் என்பது குறித்து விளக்கிடச் சொல்லலாம்.

☐ உணவுப் பொருட்களுடன் மற்றும் முகப்புச் சீட்டுகளுடன் (Labels) விளக்கமளித்தல்– மாணவர்களை நல்ல மற்றும் ஆரோக்கியமான உணவு

வகைகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளுடன் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும் உணவுகளை (எண்ணெய்/ கொழுப்பு அதிகமுள்ள உணவுகள்) பட்டியலிடச் சொல்லலாம்.

- ☐ ஆபத்துவிளைவிக்ககூடிய, நச்சுத்தன்மை சேர்க்கப்பட்ட உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்பட்டுள்ளது குறித்து விவாதம் செய்யலாம்.

9. மருந்துகள் – கட்டுப்பாடு மற்றும் வரன்முறை:

ஒவ்வொரு மாநிலத்தின் மருந்து கட்டுப்பாடு அலுவலர் மருந்துகள் தயாரிப்பு மற்றும் விநியோகத்தினை வரன்முறைப்படுத்துகிறார். மருந்து கட்டுப்பாடு சட்டம், 1950 மற்றும் மருந்து மற்றும் அலங்காரப் பொருட்கள் சட்டம், 1940 இவைகளை பிரயோகப்படுத்தி நாட்டில் மருந்துகளை கட்டுப்படுத்தி வரன்முறைப்படுத்துகிறார். மருந்துகளை பயன்படுத்தும் நுகர்வோர் பின்வரும் இனங்களை கருத்தில் கொள்ள வேண்டும்.

i) தயாரிப்பு தேதி/காலவதியாகும் காலம் மற்றும் பேட்ச் எண் இவற்றை கவனித்தல் வேண்டும்.

ii) உற்பத்தியாளரின் பெயர் மற்றும் விலாசம் அச்சிடப்பட்டுள்ளதா என கவனித்தல் வேண்டும்.

iii) மருந்தின் பெயரை மருத்துவரால் கொடுக்கப்பட்ட மருந்துச் சீட்டுடன் ஒப்பிட்டு பார்த்தல் வேண்டும்.

iv) அதிகபட்ச சில்லறை விற்பனை விலையினை தொகைப் பட்டியுடன் ஒப்பிடல் வேண்டும்.

v) பயன்படுத்துவதற்கான விளக்கம் / அளவு / சேமிப்பு ஆகியவற்றை கவனமாக படித்தல் வேண்டும்.

vi) சிவப்பு வண்ணத்திலான நேர் கோடு மருந்து உரையின் இடதுபுறத்தில் இருப்பின் அந்த மருந்துகள் யாவும் மருந்துச் சீட்டின் பேரிலேயே வழங்கப்பட வேண்டும்.

vii) மருந்துகளில் அச்சிடப்பட்டுள்ள நிலையான பாதுகாப்பு அறிவிப்புகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

viii) தவறான முறையில் மருந்துகள் விற்கப்பட்டால் அவற்றை உரிய அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

ix) எப்பொழுதும் பட்டி (Bill) கேட்டுப் பெற வேண்டும். (பட்டியிருந்தால்தான் பாதிக்கப்பட்டால் வழக்குகள் தொடர இயலும்)

x) மருத்துவரின் மருந்துச் சீட்டின் பேரிலேயே எப்போதும் மருந்துகள் வாங்க வேண்டும்.

மாணவர்கள் எவ்வாறு மருந்துகளை பயன்படுகிறார்கள் என்பது குறித்து விவாதிக்கச் சொல்லாம். மாவட்ட மருந்து ஆய்வாளர் அவரது அனுபவங்களை, மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

10. வணிகம் – வர்த்தக நிர்பந்தம் (உற்பத்தி பொருள் மற்றும் விளம்பர ஆய்வு)

விளம்பரத் தகுதிகளை, இந்திய விளம்பர நிலை குழுவில் உள்ள கோட்பாடுகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு சட்டம், 1986 வரன்முறை செய்கிறது. பல்வேறு உற்பத்திப் பொருட்களின் விளம்பரங்களை புதியது, பழையது மற்றும் பிரபலமானது என நுகர்வோரின் நிலையிலிருந்து ஆய்வு செய்யலாம்.

மாணவர்கள் உண்மைக்கு புறம்பான விளம்பரங்களை வரிசைப்படுத்தலாம். நகைச்சுவை நாடகம், ஓரங்க நாடகம் இவற்றின் மூலம் விளம்பரங்கள் எவ்வாறு தவறான பாதையில் இழுத்து செல்கிறது என்பதையும், தவறான அறிவிப்பு, உற்பத்தியாளரின் தந்திரமான முறைகள், பொருளின் தரம் சம்பந்தமாக முழுமையான விளக்கம் இல்லாமை, விலை குறைப்பு மற்றும் இலவச பரிசுகளின் பின்னணியில் உள்ள உண்மைகளை விளக்கலாம்.

விளம்பரத்தின் மூலம் ஏமாற்றப்படாமல் இருக்க உற்பத்திப் பொருட்களுக்கான தற்போதைய உண்மையான விளம்பரத்தினை பொருளுடன் விளக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

தவறான திசை திருப்பும் விளம்பரத்திற்கும் தரமான விளம்பரத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை கண்டறியுமாறு மாணவர்களை கேட்டுக் கொள்ளலாம். தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்தப் பயிற்சிக்கு பத்திரிக்கைகள்/வார இதழ்களில் இடம்பெற்றுள்ள விளம்பரங்களின் உதவியோடு வழிகாட்டலாம்.

11. நிலைத்த தன்மை வாய்ந்த நுகர்வு: (Sustainable Consumption)

சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த, மாசுபடுதல், பாதுகாத்தல், மறுஉபயோகம் போன்றவற்றைப் பற்றி மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும். அதே

போல் தேவைக்கு அதிகமாக, தேவையில்லாது பொருட்களை வாங்காமல் இருப்பது பற்றி மாணவர்கள் உணர வேண்டும்.

- ☐ நம்மைச் சுற்றியுள்ள இயற்கையான சுற்றுச்சூழல், காடுகள், ஏரிகள், ஆறுகள், வன உயிரினங்கள் மற்றும் இதர இயற்கை வளங்களை ஏன் பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து காரணங்களை மாணவர்களை பட்டியலிடச் சொல்லலாம். குறைந்தளவு காகிதம் உபயோகிப்பது வனத்தை பாதுகாக்கும். குறைந்தளவு தண்ணீர் பயன்படுத்தும் பழக்கம் தண்ணீர் தட்டுப்பாடு மற்றும் வறட்சியிலிருந்து நம்மை காக்கும்.
- ☐ மாநில அரசின் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் செயல்பாடுகளை மாணவர்களுக்கு விளக்கலாம்.
- ☐ வேறுபட்ட பயிற்று களங்கள் / உபகரணங்கள் வாயிலாக பலவகைப்பட்ட மாசுபாடுகளை விளக்கலாம்.
- ☐ இயற்கையினை சீரழிக்கும் இனங்களை பட்டியலிடலாம்.
  - i) காடுகள் அழிக்கப்படுதல்
  - ii) வனவிலங்குகள் அழிதல்
  - iii) தொழிற்சாலை கழிவுகள்
  - iv) ஊறுவிளைவிக்கும் உயிர்கொல்விகள்/பூச்சி மருந்துகள்
  - v) தண்ணீர் / காற்று / நிலம் அதிகம் மாசுபடுதல்
  - vi) பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டின் அதிகரிப்பு
- ☐ மாணவர்களுக்கு 5R's (Reduce, Reuse, Recycle, Refuse and Rethink) அதாவது ஐந்து 'மறு' க்கள் <u>மறு நிலை</u>, <u>மறு உபயோகம்</u>, மறு <u>சுழற்சி</u>, <u>மறுத்தல்</u> மற்றும் <u>மறு சிந்தனை</u> ஆகியவற்றைப் பழக்கப்படுத்த வேண்டும். ஒவ்வொரு மாணவரும் இதை எவ்வாறு பயன்படுத்தப் போகிறார்கள் என விளக்கச் சொல்லலாம்.

  'ஐந்து "மறு" போட்டி' ஒன்றினை மாணவர்களுக்கிடையே நடத்தி சிறந்த நுகர்வுக்கு ஆரோக்கியமான போட்டியாக உருவாக்கலாம்.

  <u>போட்டித் தலைப்புகள்:</u>

  1. வீட்டில் மின்சார பயன்பாட்டை குறைத்தல்

2. வீட்டில் நீர் பயன்பாட்டை குறைத்தல்

3. காகித மறு உபயோகம்

4. பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்தல்

- ☐ நுகர்வு எவ்வாறு சுற்றுச்சூழலை பாதிக்கிறது என்பதனை மாணவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கி, நிலைத்த தன்மை வாய்ந்த நுகர்வின் அவசியத்தை எடுத்துரைக்க வேண்டும்.
- ☐ ஒருவருடைய நுகர்வு தன்மை மற்றும் அளவு மற்ற பிறருடைய நுகர்வு தன்மைக்கு ஊறுவிளைவிக்காதவாறு உறுதி செய்தலே நிலைத்ததன்மை வாய்ந்த நுகர்வு ஆகும் (Sustainable Consumption)
- ☐ இயற்கை வளங்களை பாதுகாக்கப்பட வேண்டும். மற்றும் சுழற்சி முறை பயன்பாட்டின் அதிகரிப்பின் அவசியம் குறித்து மாணவர்களுக்கு விளக்க வேண்டும்.
- ☐ சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம், 1986 நமது சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், முன்னேற்றவும் அரசுக்கு அதிகாரமளித்துள்ளது.

12. நுகர்வோர் புகார்களும் குறை தீர்ப்பும்:

நுகர்வோரின் உரிமைகள் மீறப்படும்போது நுகர்வோர் புகார் செய்யலாம். நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 நுகர்வோரின் உரிமைகளை பாதுகாக்கிறது.

I. யாரால் புகார் தெரிவிக்க இயலும் ?

- ☐ ஒரு நுகர்வோர்
- ☐ ஒரு நுகர்வோர் நிறுவனம்
- ☐ நுகர்வோர் நிறுவன குழுவின் பிரதிநிதி ஒருவர்
- ☐ மத்திய மற்றும் மாநில அரசுகள்

II. எப்பொழுது புகார் பதிவு செய்யப்படலாம் ?

- ☐ வாங்கும்போது பொருளில் தரக்குறைபாடு, போலித்தன்மை, குறைபாடு, பழுது அல்லது அளவு குறைபாடு இருப்பின்.

- ☐ சேவையின் தரம் குறைவாகவோ அல்லது காலந் தாழ்த்தியோ அல்லது சேவை அளிக்கப்படாமலோ இருப்பின்.
- ☐ அதிகபட்ச சில்லரை விற்பனை விலைக்கு கூடுதலாக தொகை செலுத்தப்பட்டிருப்பின்.
- ☐ தவறான விளம்பரம் அல்லது தவறான பிரதிநிதித்துவம் மூலம் ஏமாற்றப்பட்டிருப்பின்,
- ☐ இழப்பு ஏற்பட்ட தேதியிலிருந்து இரண்டு வருடத்திற்குள் புகார் பதிவு செய்யப்பட வேண்டும்.

III. எங்கே புகார் அளிக்கலாம்?

அ) மாவட்ட நுகர்வோர் மன்றம்

மொத்த இழப்பீட்டுத் தொகை ரூ.20 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின்.

ஆ) மாநில நுகர்வோர் ஆணையம், 212, ஆர்.கே. மடம் சாலை, மைலாப்பூர், சென்னை – 600 004. (தொலைபேசி : 044 – 24618900)

i) மொத்த இழப்பீட்டுத் தொகை ரூ.20 இலட்சத்திற்கு மேலும் ஒரு கோடிக்கும் குறைவாக இருப்பின்

ii) மாவட்ட மன்றத்தின் ஆணையின் மீது மேல்முறையீடு

இ) தேசிய நுகர்வோர் ஆணையம், 5வது மாடி, 'A' Wing, ஜன்பத் பவன், புது தில்லி – 110 001. (தொலைபேசி : 011 – 23329248)

i) மொத்த இழப்பீட்டுத் தொகை ஒரு கோடி ரூபாய்க்கும் மேலே இருப்பின்.

ii) மாநில ஆணையத்தின் ஆணையின் மீது மேல் முறையீடு.

IV. எவ்வாறு புகார் செய்வது?

புகாரை நேரிடையாகவோ, அல்லது சான்றளிக்கப்பட்ட நபர் மூலமாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமோ மாவட்ட மன்றம்/மாநில ஆணையத்திற்கு அனுப்பப்படலாம். புகார்கள் பின்வரும் விவரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

அ) புகார்தாரர் பெயர், முகவரி மற்றும் அவரை பற்றிய விவரம்.

ஆ) எதிர்மனுதாரர் அல்லது எதிர்மனுதாரர்கள் பெயர், முகவரி மற்றும் அவர்/அவர்கள் பற்றிய விவரம் (சரியாக தெரிந்திருந்தால்)

இ) புகாரின் உண்மை தன்மை மற்றும் எங்கு, எப்பொழுது உருவானது.

ஈ) புகார் மீதான குற்றச் சாட்டுகள் குறித்த ஆவணங்கள்.

உ) புகார்தாரர் கோரும் நிவாரணம்.

V. நுகர்வோர் மன்றம் / ஆணையத்தால் அளிக்கப்படும் நிவாரணங்கள் யாவை?

அ) குறைபாடுகளை களைதல்.

ஆ) பொருட்களை மாற்றம் செய்தல்.

இ) கூடுதல் விலையை திரும்பப் பெற்றுத் தருதல்.

ஈ) சேவை குறைவாய் இருப்பின் சேவைத் தொகையை திரும்பப் பெற்றுத் தருதல்.

உ) நியாயமற்ற (Unfair) வர்த்தக முறை அல்லது வரையறுக்கப்பட்ட (Restrictive) வர்த்தக முறைகளை தடை செய்தல்.

ஊ) ஆபத்தான பொருட்களின் விற்பனையினை தடை செய்தல்.

எ) இழப்பிற்கான நஷ்ட ஈட்டினை பெற்றுத் தருதல்.

ஏ) வழக்கு செலவுகளை அளித்தல்

VI. வேறெங்கெல்லாம் நுகர்வோர் புகார் செய்யலாம்? (குறிப்பாக நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்குகளை பதிவு செய்யுமுன்)

மாவட்ட ஆட்சியரிடம் நுகர்வோர் புகார் செய்யலாம். மாவட்ட ஆட்சியர் நுகர்வோர் பாதுகாப்பு குழுவின் தலைவர் ஆவார். மாவட்ட வழங்கல் அலுவலர் இதன் உறுப்பினர் செயலாளர் ஆவார். மாநில நுகர்வோர் பாதுகாப்பு குழுவின் உறுப்பினர் செயலாளராக செயல்படும், குடிமைப் பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், சென்னை அவர்களிடமும் புகார் செய்யலாம். மாவட்ட அளவிலான செயல்படுத்தும் நிறுவனங்கள்/அதிகாரிகளிடம் இப்புகார்கள் தொடர்பாக சட்டப்படி நடவடிக்கை எடுத்து நியாயம் வழங்க மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்துவார்கள். இதில் திருப்தி ஏற்படாவிடில், நுகர்வோர், நுகர்வோர் நீதிமன்றங்களை அணுகலாம். நுகர்வோர் நீதிமன்றங்கள் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் வழக்குகளை ஃபைசல் செய்யும். ஆதலால் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவில் புகார் செய்தல் சில நேரங்களில் துரித மற்றும் முன்னைப்பான நடவடிக்கைக்கு உதவும்.

13. உணவு கலப்படம் – பரிசோதனை பெட்டியுடன் சோதனை விளக்கம்

உணவு கலப்பட பரிசோதனை பெட்டிகளை நுகர்வோர் மன்றங்களுக்கு வாங்க, ஒருங்கிணைப்பு நிறுவனங்கள் (தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்) உதவலாம். CONCERT, சென்னை இது போன்ற ஒரு பரிசோதனை பெட்டியை வடிவமைத்துள்ளது.

- வர்த்தகர்கள் எவ்வாறு உணவுப் பொருட்களில் கலப்படம் செய்து நுகர்வோரை ஏமாற்றுகின்றனர் என்பது குறித்து மாணவர்களுக்கு பரிசோதனை உபகரணங்களுடன் விளக்கலாம். பள்ளியின் வேதியியல் ஆசிரியர் உதவியுடன் சோதனைக் கூடத்தில் இப்பயிற்சியினை செய்து காட்டலாம்.
- வணிகர்கள், நுகர்வோரை ஏமாற்ற செய்யும் கலப்படங்களை, மாணவர்களிடம் பட்டியலிடச் சொல்லலாம்.
- பரிசோதனை பெட்டியை, உபகரணங்களை சரியாக பயன்படுத்துவதற்கும் அதை மாணவர்களுக்கு நன்கு கற்றுத் தருவதற்கும் ஏதுவாக ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அவர் மேல்நிலை வேதியியல் ஆசிரியர் அல்லது பரிசோதனைக்கூட உதவியாளரின் உதவியை நாடலாம்.
- உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், 1954ல் கண்டுள்ள சிறப்பம்சங்கள் நன்றாக விளக்கப்பட வேண்டும்.

14. தர உத்திரவாதம் – தரக் கட்டுப்பாடு விதிகள்

பொருட்களின் தரம் மற்றும் நுகர்வோரின் சேவையை நிர்ணயிக்க பொருட்களுக்கும் மற்றும் நிறுவனத்திற்கும் தரச் சான்றுகள் வழங்கப்படும். சான்றளிக்கப்பட்ட பொருள் நுகர்வோருக்கு குறைந்தபட்ச தரம் மற்றும் நிலையினை உறுதி செய்கிறது. அதனால் அவர்கள் தரக்குறைவான பொருட்களை வாங்குவதிலிருந்தோ அல்லது தரமற்ற நுகர்வோர் சேவையிலிருந்தோ பாதுகாக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு மன்றத்திலும் பின்வரும் தரச் சான்றுகள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும்.

அ) அக்மார்க் (AGMARK) – உணவு பொருட்களுக்கு மட்டும்

ஆ) ஐ.எஸ்.ஐ. (ISI)

இ) ஐ.எஸ்.ஓ. 9000

ஈ) ஹால்மார்க் (Hallmark) – தங்க நகைகளுக்கு மட்டும்

உ) எஃப்.பி.ஓ. (உணவு உற்பத்தி ஆணை) – பதப்படுத்தப்பட்ட உணவுகளுக்கு மட்டும்

ஊ) சில்க் மார்க் – பட்டுத் துணிகளுக்கு

எ) எக்கோ மார்க்

- வேளாண் உற்பத்தி (தரப்படுத்தல் மற்றும் வாணிபம்) சட்டம், 1937ல் கண்டுள்ள முக்கிய சாராம்சங்கள் மற்றும் எடை மற்றும் அளவுகள் சட்டம், 1976ல் உள்ள விதிகள் யாவும் நுகர்வோர் மன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும்.
- பல்வேறு தர நிலைகள் / தர முத்திரைகள் மற்றும் தரமான பொருட்களை வாங்குவதால் ஏற்படும் பலன்களை மாணவர்களிடம் பட்டியலிடச் சொல்லாம்.

15. சந்தையில் பொருட்களை எவ்வாறு வாங்குவது?

ஒரு பொருளை வாங்குவதற்கு முன் கவனிக்க வேண்டிய சில பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகள் பின்வருமாறு:–

அ) சந்தைக்குச் செல்லுமுன், வாங்க வேண்டிய பொருட்களின் பட்டியல் தயார் செய்யப்பட வேண்டும். நுகர்வோர் சந்தைக்கு தேவைப் பொருட்களின் பட்டியல் இல்லாமல் சென்றால், வியாபாரிகள் உங்களை எதையெல்லாம் வாங்க வைக்க வேண்டும் என்று அவர்களுக்கு தோன்றுகிறதோ அதையெல்லாம் வாங்க வைத்து விடுவார்கள். அதாவது வியாபரிகளின் வற்புறுத்தலுக்கு ஆளாக நேரிடலாம்.

மேலும் வியாபாரிகளின் விற்பனை போக்கு மற்றும் திறமைக்கேற்ப நுகர்வோரின் உண்மைத் தேவையினை பூர்த்தி செய்ய இயலாமல், பொருட்களை வாங்க நேரிடலாம்.

ஆ) வாங்கப்படவேண்டிய பொருட்களின் பட்டியல் தயார் செய்யப்பட்ட பின்னர், பொருட்களின் தரம் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இ) சந்தையில் கிடைக்கும் அனைத்து பிராண்டுகளின் (Brand) ஒப்புமைப்பட்டியல் தயார் செய்ய வேண்டும். எந்த பிராண்டை வாங்குவது என உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் விவாதித்து முடிவெடுக்கலாம்.

ஈ) பொருட்கள் வாங்கப்படவுள்ள கடைகள்/இடம்/சந்தையினை முடிவு செய்யவேண்டும். முடிந்தால், கடைகள் மற்றும் இடங்களை ஒப்புமைப்படுத்தி முடிவெடுக்கலாம்.

உ) வாங்குவதற்கு முன் பின்வருவனவற்றை கண்காணிக்கவும்.

1) வில்லை (லேபிள்)

2) அதிகபட்ச சில்லரை விற்பனை விலை குறிக்கப்பட்டது / கேட்கப்பட்ட விலை.

3) தேவைப்படின் பாதுகாப்பு மற்றும் தரச்சான்று,

4) பொருளின் வில்லையில் உள்ள அறிவுரைகளை படித்தல்.

5) விலையுடன் சேர்த்துள்ள வரி மற்றும் இதர கட்டணங்கள் குறித்து கேட்டல்

(6) ஏதேனும் ஆவணங்களில் நுகர்வோர் ஒப்பமிட வேண்டியிருப்பின் அதில் கண்டுள்ள அனைத்து நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகளையும் நன்றாகப் படித்து அதனை முழுமையாக பூர்த்தி செய்தல் (உதாரணத்திற்கு தவணை முறையில் வாங்கும் போது, கடனில் வாங்கும்போது, மாற்றுப் பொருள், சிறப்புத் திட்டங்கள், முதலியன) வட்டி கணக்கு விதத்தை சரியாக படித்தல் வேண்டும்.

7) குறைபாடுகள் இருப்பின் பொருட்கள் திரும்ப எடுத்துக் கொள்ளப்படுமா என்பதனை கடைக்காரரிடம் உறுதி செய்து கொள்ள வேண்டும். "விற்ற பொருட்கள் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது" என்ற பிரிவுகள் சட்டத்திற்கு புறம்பானவை, (நுகர்வோர் பாதுகாப்பு விதிகளின்படி)

8) ஒரு பொருளை வாங்குவதற்கு முன் அதன் தேவையை உணர்ந்து தீர்மானிக்க போதிய நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.

9) அனைத்து பொருட்களுக்கும் விலை பட்டியினை வலியுறுத்துங்கள்.

10) தயாரிப்பாளர்கள் பரிந்துரைத்துள்ளவாறு பொருட்களை பயன்படுத்துங்கள்.

11) உத்தரவாதம் மற்றும் பொறுப்புறுதி குறித்த விவரங்களை படியுங்கள்.

12) உத்தரவாதம் மற்றும் பொறுப்புறுதி குறித்த சான்றுகள் மற்றும் அலனைத்து விற்பனை இரசீதுகளையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

13) குறைபாடுகள் காணப்பட்டால் அதனை உடனடியாக கடைக்காரர் / தயாரிப்பாளர் இவர்களின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

14) பொருட்கள் தயாரிப்பு / சேவை தொடர்பான அனைத்து ஆவணங்களையும், தகவல்களையும் கடிதப் போக்குவரத்து ஆகியவற்றை தொகுத்து வைத்துக் கொள்ளுங்கள்.

மாணவர்களை உள்ளூர் சந்தைகளுக்கு அழைத்துச் சென்று பொருட்கள் பற்றி அறிந்து, முடிந்தால், மேலே கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி பொருட்களை வாங்கச் சொல்லி அதனால் ஏதேனும் இடையூறுகள் அல்லது விதிமீறல்கள் ஏற்பட்டால் அதனை தெரிவிக்கச் சொல்லாம். அவர்களது அனுபவங்களை அடுத்த வகுப்பில் பகிர்ந்து கொள்ளலாம். அல்லது வீட்டுப்பாடமாக எழுதி வரச்சொல்லலாம். தன்னார்வ நுகர்வோர் நிறுவனத்தின் பிரதிநிதி தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளலாம்.

16. போக்குவரத்து – விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு முறைகள், குறிகள் மற்றும் சைகைகள்:

சக்கரத்தின் கண்டுபிடிப்பு மனிதனை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு துரிதமாக செல்ல பெரிதும் உதவியது. மனிதன் கண்டுபிடித்த இயந்திரங்கள் (மோட்டார் பொருத்திய வாகனங்கள்) குறுகிய நேரத்தில் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்கு செல்ல பயன்படுத்தப்படுகிறது. இந்த மோட்டார் வாகனங்களின் துரித வேகத்திலிருந்து சராசரி வாழ்க்கையை பாதுகாப்பதற்காக சாலைகள் அமைக்கப்பட்டு, அதில் தான் மோட்டார் வாகனங்கள் செல்லும்படியாகவும் அமைக்கப்பட்டது. சாலைகளில் மோட்டார் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் சாலை உபயோகிப்பவர்களின் பாதுகாப்பு கருதியும் சாலை விதிகள், குறியீடுகள் மற்றும் சைகைகள் ஏற்படுத்தப்பட்டன.

போக்குவரத்து பிரிவில், மனிதனையும், இயந்திரங்களையும் ஒழுங்கு படுத்துவதற்காக போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் உருவாக்கப்பட்டன. பல்வேறு வகையான போக்குவரத்து குறிகள் மற்றும் சைகைகள் சாலைகளை பயன்படுத்துவோருக்கு உதவுகிறது. போக்குவரத்து குறியீடுகள் சாலை சந்திப்புகளில் ஏற்படும் நெரிசலைத் தவிர்க்கவும் ஒரு சாலையிலிருந்து மற்றொரு சாலைக்கு மாறவும் பயன்படுகிறது.

- ☐ போக்குவரத்து சைகைகள் மற்றும் குறியீடுகள் விவரம் இணைப்பு–Vல் தரப்பட்டுள்ளது.
- ☐ சாலையைப் பயன்படுத்துவோருக்கு உபயோகப்படும் பல்வேறு வகையான குறிகள் இணைப்பு–VIல் தரப்பட்டுள்ளன.
- ☐ பல்வேறு வகையான தகவல் குறிகள் இணைப்பு–VIIல் தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள்/உள்ளூர் போக்குவரத்து காவலர்கள் கண்காணிப்பில் மாணவர்களை சரியாக சாலையை கடக்குமாறு கேட்டுக் கொள்ளலாம். உள்ளூர் காவல்துறை ஆய்வாளரை இது தொடர்பான செய்முறை விளக்கவுரைகள் அளிக்கச் சொல்லலாம்.

17. நுகர்வோர் குழுக்களுடன் கலந்துரையாடல்

பல்வேறு தரப்பட்ட நுகர்வோர் குழுக்களுடன் கலந்துரையாடலுக்கு ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பு நிறுவனம் ஏற்பாடு செய்யலாம். இந்த கலந்துரையாடல் நுகர்வோர் மன்றம் மற்றும் நுகர்வோர் குழுக்களின் இணைந்த செயல்பாடாய் இருக்கும்.

XV. நுகர்வோர் மன்றங்களின் சுயசார்பு இயக்கம்

நுகர்வோர் மன்றங்கள் நிலைத்திருக்கவும், நீடித்திருக்கவும் அவை சுயஇயக்க மற்றும் சுயசார்பு தன்மை கொண்டவைகளாக இருத்தல் வேண்டும். இந்த சுயசார்பு தன்மையினை ஏற்படுத்த, நுகர்வோர் மன்றங்கள் அதன் நிதி ஆதாரத்தை (போதிய அளவு) உயர்த்திக் கொள்ள வேண்டும். அதற்கு அவைகள் பின்வரும் வழிமுறைகளை கடைப்பிடிக்கலாம்.

i) அனைத்து மாணவர்களையும் மன்றத்தின் உறுப்பினர்களாக்குதல் மற்றும் அவர்களிடம் குறைந்தபட்ச கட்டணம் பிரதி மாதமும் வசூல் செய்யலாம் (உதாரணம் : ஒரு மாணவனுக்கு ஒரு மாதம் ஒரு ரூபாய் அல்லது ஐந்து ரூபாய்)

ii) நுகர்வோர் மன்ற போட்டிகளில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட வண்ணப்படங்கள்/அட்டைகள்/கைவினைப் பொருட்கள் ஆகியவற்றை கண்காட்சி மற்றும் விற்பனைக்கு ஏற்பாடு செய்தல்.

iii) உலக நுகர்வோர் உரிமை தினம் (மார்ச் 15) அல்லது தேசிய நுகர்வோர் தினம் (டிசம்பர் 24) இவைகளில் நுகர்வோர் உரிமை குறித்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்து அதற்கு வருகை புரிவோரிடம் ஒரு சிறிய தொகையை நுழைவுக் கட்டணமாக வசூலித்தல்.

iv) மன்ற செய்தி மடல் / மன்ற பத்திரிகைகளில் விளம்பரத்திற்கான தொகை பெறுவதன் மூலம் நிதியினை உயர்த்துதல்.

v) நிதியினை பெருக்க கலாச்சார பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

மத்திய அரசின் நுகர்வோர் துறையிலிருந்து பெறப்படும் நிதி, மன்றம் துவக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் வழங்கப்பட மாட்டாது. ஆதலால் மன்றங்கள் யாவும் சுய சார்பு தன்மை அடைய தகுந்த நடவடிக்கைகளை உரிய நேரத்தில், முன் கூட்டியே எடுத்திட வேண்டும். இருப்பினும் இரண்டு வருடங்களுக்கு பிறகும் மன்றங்கள் தங்களது நடவடிக்கைகளை தமிழ்நாடு உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு அவ்வப்போது அளித்தல் வேண்டும்.

வர்த்தகம்/வணிகம் உள்ள வரை நுகர்வோர் இயக்கம் அத்யாவசியமாகிறது. ஆதலால் நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்க நுகர்வோர் மன்றங்கள் பிரதானமாக செயல்பட்டு ஒரு நிலையான நுகர்வோர் இயக்கத்தினை நமது நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

★ ★ ★

இணைப்பு – I

படிவங்கள்

படிவம் – அ

நுகர்வோரின் மன்றம் அமைக்க நுகர்வோர் நல நிதியிலிருந்து நிதிகோரும் விண்ணப்பபடிவம்

குறிப்பு :–

தயவு செய்து இப்படிவத்தை பூர்த்தி செய்யும் முன்பு சரியான விவரம் தரவேண்டும் என்பதனையும் உண்மைக்கு புறம்பான தகவல்களை மறைத்து கொடுக்கப்பட்டால் அவைகளை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு பொய்யானது என்று அறியப்பட்டால் சட்டரீதியான நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என அறிய வேண்டும்.

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முழு அஞ்சல் விலாசம் :

2. நிறுவப்பட்ட நாள் :

3. (அ) சங்கங்களின் பதிவுச்சட்டம், 1860ன் கீழ் பதிவு செய்யப்பட்டதா அல்லது வேறு ஏதாவது சட்டத்தின் கீழா? :

   (ஆ) ஆம் எனில் பதிவு எண், வருடம் (சமீபத்திய புதுப்பித்தல் கட்டண ரசீது(ம) சங்கத்தின் துணை விதிகள் நகல் இணைக்கப்படவேண்டும்) :

4. அரசு அங்கீகாரம் பெற்ற வாரியத்துடன் இணைக்கப்பட்டதா? (கல்வி நிறுவனங்களுக்கு மட்டும் பொருந்தும்) :

5. நிர்வாகக் குழு உறுப்பினர்கள் பெயர் மற்றும் விலாசம் / நிர்வாக உறுப்பினர்கள் தொழில் :

6. நிதி பெற அங்கீகாரம் பெற்ற அலுவலர் பெயர் மற்றும் பதவி விவரம் :

7. நுகர்வோர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டவுள்ள :
எண்ணிக்கை. (அரசால் அங்கீகரிக்கப்பட்ட
வாரியம் / பல்கலைக்கழகத்துடன்
இணைக்கப்பட்ட விவரம், மன்றங்களின்
விவரம், பள்ளி / கல்லூரி விலாசம்,
மன்றம் நிறுவப்பட்ட நாள், ஆசிரியர்
ஒருங்கிணைப்பாளர் பெயர் உறுப்பினர்
எண்ணிக்கை மற்றும் நடப்பு
நடவடிக்கைகள் விவரம்
இணைக்கப்பட வேண்டும்

8. தேவைப்படும் தொகை :

9. ஒவ்வொரு நுகர்வோர் மன்றத்தின் :
சார்பாக எடுக்கப்படவிருக்கும்
நடவடிக்கை விவரம், நேரம் மற்றும்
செய்து முடிக்கவிருக்கும் காலம் பற்றிய
அட்டவணை விவரம்.

10. நுகர்வோர் பாதுகாப்பு துறையிலிருந்து :
கடந்த காலத்தில் நிதி பெறப்பட்டிருந்தால்
அதன் விவரம்

11. பின்வரும் ஆவணங்கள்
இணைக்கப்படவேண்டும்

1. மூன்று ஆண்டுக்களுக்கான தணிக்கை
செய்யப்பட்ட வரவு செலவு பட்டியல்
மற்றும் ஆண்டு அறிக்கைகள்

2. மேலொப்பம் செய்யப்பட்ட பதிவுச்
சான்றின் நகல் மற்றும் இறுதி
புதுப்பித்தல் சான்று நகல்

3. அரசு அங்கீகாரம் பெற்ற வாரியத்தால்
வழங்கப்பட்ட இணைப்புச் சான்றின்
கடித நகல் (கல்வி நிறுவனங்களுக்கு
மட்டும்)

4. குறிப்பிட்ட படிவத்தில்
   உறுதி வாக்கு மூலம்

5. நுகர்வோர் மன்றங்களின் பட்டியல்
   (விபரங்களுடன்)

உறுதிமொழி:

(மனுதாரர் அல்லது அவரால் அங்கீகாரம் பெற்ற முகவர் மட்டுமே கையொப்பமிட வேண்டும்)

மேலே சொல்லப்பட்ட விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரிந்த வகையில் சரியானது மற்றும் உண்மையானதாகும். எந்த தகவல்களும் மறைக்கப்படவில்லை. இத்திட்டத்திற்காக சொல்லப்பட்ட அனைத்து வழிமுறைகளும், நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் என்னால் / எங்களால் வாசித்து தெரிந்து கொண்ட பின்னர் எங்கள் நிறுவனம் / அமைப்பு சார்பாக பங்கேற்றுக் கொள்ளச் சம்மதிக்கின்றேன் / சம்மதிக்கிறோம். இந்த நிதியுதவி வழங்கப்பட்டால் அதனை எதற்காக வழங்கப்பட்டதோ அந்நோக்கத்திற்காகவும், நுகர்வோர் நலனை உயர்த்தவும் / பாதுகாக்கவும் மட்டுமே பயன்படுத்துவோம். எங்களின் அமைப்பு எந்த நிறுவனத்தாலும் கருப்பு பட்டியலில் வைக்கப்படவில்லை எனவும் கண்டனத்துக்குள்ளானாதும் இல்லை எனவும் சான்றளிக்கிறோம். இங்கு தரப்பட்ட விவரங்கள் தவறானதாக / தவறான நோக்கத்துடன் தரப்பட்டது என்றால் குற்றவியல் சட்டத்திற்கு உட்படத்தப்படும் என்பதனை நன்கு அறிவேன். (பொருந்தாததை அடித்துவிடவும்)

விண்ணப்பதாரர்

படிவம் – ஆ

நுகர்வோர் மன்றத்தின் மாதாந்திர நடவடிக்கை அறிக்கை

மாதம்: –

(1) பள்ளி / கல்லூரி / சுயஉதவிக்குழு பெயர் :
- அ) பள்ளி / கல்லூரி / சுயஉதவிக்குழு விலாசம் :
- ஆ) தொலைப்பேசி எண் :
- இ) 'இ' மெயில் விலாசம் :

(2) ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர்
- அ) பெயர் :
- ஆ) பள்ளியில் வகிக்கும் பதவி :

(3) ஒருங்கிணைப்பு நிறுவனம் பெயர் :
- அ) தொலைப்பேசி எண் :
- ஆ) பிரதிநிதியின் பெயர் :

(4) மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை : மாணவர்கள் மாணவிகள் மொத்தம்

(5) நிதியுதவி : வரவு பயன்படுத்தியது மீதி இருப்பு

(6) இம்மாதத்தில் செயல்படுத்திய நடவடிக்கைகள் விவரம்
(நாள், பங்கு பெற்ற மாணவர்கள் மற்றும் நடவடிக்கை விவரம் சுருக்கமாக குறிப்பிடவும்)

- அ) பாடம் நடத்தியது / பயிற்சி :
- ஆ) கள ஆய்வு / பயணம் :
- இ) செயல் விளக்கம் :
- ஈ) போட்டிகள் :
- உ) விழாக்கள் (முக்கிய நாட்கள்) :
- ஊ) உள்ளூர் சமூகத்தினர் சந்திப்புகள் :
- எ) விளம்பரப் பலகை :

ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் கையொப்பம்.

படிவம்–இ

நுகர்வோர் மன்றத்தின் நிதிக் கணக்கு – மாதாந்திர வரவு செலவு கணக்குப் பட்டியல்

மாதம்:

மன்றத்தின் பெயர்:

வரவு				செலவு			
நாள்	காசோலை/வரைவுக் காசோலை எண், நாள் அல்லது ரொக்கம்	விவரம்	தொகை ரூ. பை.	நாள்	பட்டியல் எண்	செலவின் விவரம்	தொகை ரூ. பை.
		மொத்தம்				மொத்தம்	

சுருக்கம்

	ரூ.	பை.
ஆரம்ப இருப்பு	....	
வரவு	....	
மொத்தம்	....	
செலவு	....	
இறுதி இருப்பு		

படிவம்—14

பயனீட்டுச் சான்று — நுகர்வோர் மன்றம்

1) பள்ளி / கல்லூரி பெயர் :

2) ஒருங்கிணைப்பு நிறுவனம் பெயர் :

3) பயனீட்டுச் சான்றின் வருடம் :

4) அ) கடந்த ஆண்டில் செலவிடப்பட்ட தொகை :

ஆ) நடப்பு ஆண்டில் பெற்ற நிதி :

இ) நடப்பு ஆண்டில் செலவிடப்பட்ட தொகை :

ஈ) வருடாந்திர இறுதியில் செலவிடப்படாத நிலுவைத் தொகை :

அ) நுகர்வோர் மன்றத்தின் பல்வேறு நடவடிக்கைகளுக்கான இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ. ....(...)பெற்றதற்கு இதுவே சான்றாகும்.

ஆ) மேலே பெறப்பட்ட தொகையில் ரூ. .... (...) எதற்காக பெறப்பட்டதோ அதற்காகவே பயன்படுத்தப்பட்டதற்கு சான்றளிக்கப்படுகிறது. மேலும் ரூ.................. (...) செலவிடப்படாமல் நிலுவையாக உள்ளது எனவும் சான்றளிக்கப்படுகிறது.

இ) எந்த நிபந்தனைகளுடன் இந்த நிதி ஒப்படைக்கப்பட்டதோ அதே காரணங்களுக்காக முழுமையாக பயன்படுத்தப்பட்டதெனவும், தேவையான அளவில் என்னால் தணிக்கை செய்யப்பட்டு அப்பணம் முழுமையாக பயன்பட்டதெனவும் நான் முழு மனதுடன் இச்சான்றினை அளிக்கிறேன்.

நாள் :

கையொப்பம்

பெயர்

பதவி மற்றும்

விலாசம்

இணைப்பு–II

<u>பலகை</u>

முத்திரை மற்றும் குறியீட்டுச் சின்னம்
(Logo and Badge)

இணைப்பு – III

நுகர்வோர் மன்றத்தின் வருடாந்திர நடவடிக்கையைக் காட்டும் மாதிரி அட்டவணை

வ. எண்	நாள்	நடவடிக்கை	குறிப்பு
1.	15.6.05 (திங்கள்)	நுகர்வோர் மன்றம் ஆரம்பம்	
2.	1.9.05 (வியாழன்)	மாதாந்திரக் கூட்டம் (நுகர்வோர் மன்ற நடவடிக்கை, நோக்கம், பங்கு மற்றும் கடமைகள் பற்றியது)	
3.	5.9.05 (திங்கள்)	ஆசிரியர்கள் தினம் (நுகர்வோர் விழிப்புணர்வு மற்றும் நுகர்வு சம்பந்தமாக)	
4.	8.9.05 (வியாழன்)	உலக கல்வியறிவு நாள் (கல்வியறிவு க.கல்வியறிவு நு.கல்வியறிவு)	
5.	6.10.05 (வியாழன்)	மாதாந்திரக் கூட்டம் (நுகர்வோர் இயக்கம், உரிமை (ம) பொறுப்புகள்)	
6.	14.10.05 (வெள்ளி)	உலக தரக்கட்டுப்பாடு நாள் (தர உறுதி மற்றும் தரக் கட்டுப்பாடு)	
7.	16.10.05 (ஞாயிறு)	உலக உணவு நாள் (உணவு கலப்படம், சோதனைப் பெட்டியுடன் விளக்கம், உணவு பாதுகாப்பு (ம) தரம்)	இதனை தேவைப்படின் 14.10.05 கூட்டத்துடன் இணைக்கலாம்
8	3.11.05 (வியாழன்)	மாதாந்திரக்கூட்டம் (நுகர்வோர் சட்டம், நுகர்வோர் அமைப்பு, மற்றும் இதர முகவர்கள், விளக்கங்கள்)	
9.	14.11.05 (திங்கள்)	குழந்தைகள் தினம்/உலக நீரிழிவு நோய் தினம் (ஒருங்கிணைப்பு நிறுவனத்துடன் உள்ளூர் சந்தையில் பார்வையிடல்)	
10.	21.11.05 (திங்கள்)	தகவல் தொழில்நுட்ப நாள் (தகவல் அறியும் உரிமை, தகவல் தொழில் நுட்பம், ஜனநாயகத்தில் வெளிப்படை கொள்கை)	

வ. எண்	நாள்	செய்ய வேண்டியது	குறிப்பு
11.	1.12.05 (வியாழன்)	மாதாந்திரக் கூட்டம் (வியாபாரம்–வணிகத்துடன் இணைந்த விளம்பரம்)	
12.	10.12.05 (சனி)	மனித உரிமை நாள் (மனித உரிமை பற்றிய பொது விழிப்புணர்வு)	இதனை மாதாந்திர கூட்டத்துடன் சேர்த்து நடத்தலாம் (சனிக்கிழமை விடுமுறையானால்)
13.	23.12.05 (வெள்ளி)	உழவர் நாள் (விவசாயம், உணவு (ம) விவசாயி பற்றிய பொது விழிப்புணர்வு)	
14.	24.12.05 (சனி)	தேசிய நுகர்வோர் உரிமை நாள்	
15.	5.1.06 (வியாழன்)	மாதாந்திரக் கூட்டம் மருந்துக் கட்டுப்பாடு மற்றும் முறைப் படுத்துதல், நிலைத்த தன்மை வாய்ந்த நுகர்வு	
16.	12.1.06 (வியாழன்)	தேசிய இளைஞர் தினம் (காவல்துறை அதிகாரிகளுடன் போக்குவரத்து சாலை விதிகள், குறிகள் மற்றும் சைகைகள், விளக்கம்)	
17.	26.1.06 (வியாழன்)	குடியரசு தினம்	
18.	2.2.06 (வியாழன்)	மாதாந்திரக் கூட்டம் (நுகர்வோர் புகார் (ம) தீர்வு, வழக்குகள்)	
19.	28.2.06 (செவ்வாய்)	தேசிய அறிவியல் தினம் (விஞ்ஞானம் மற்றும் கேள்வி கேட்கும் தன்மை பற்றிய பொது விழிப்புணர்வு)	
20.	2.3.06 (வியாழன்)	மாதாந்திரக் கூட்டம் (நுகர்வோர் குழுக்களுடன் கலந்துரையாடல் மற்றும் போட்டிகள்)	
21.	15.3.06 (புதன்)	உலக நுகர்வோர் உரிமை தினம் (விழா–கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் விருது வழங்கல்)	ஒரு பெரிய விழாவாக கொண்டாடுதல் உள்ளூர் சமூகத் தினையும் அழைக்கப் பட வேண்டும்.

இணைப்பு–IV

ஒருங்கிணைப்பு நிறுவனங்களுக்கான தகுதி நிபந்தனைகள்

- குறைந்தபட்சம் 5 வருடம் மாவட்ட அளவிலான நுகர்வோர் நல நடவடிக்கையில் செயல்பாடுடன் ஈடுபட்டிருக்க வேண்டும்.
- மாவட்ட நிர்வாகத்துடன் சேர்ந்து நுகர்வோர் சம்பந்தமாக குறைந்தபட்சம் 3 வருட கூட்டு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்க வேண்டும்.
- அரசியல் மற்றும் சாதிப் பற்றற்றதாக இருக்க வேண்டும்.
- நாளது தேதி வரை பதிவு பெற்ற சங்கமாக இருக்க வேண்டும்.
- அரசு நிறுவனங்களினால் கண்டனம் செய்யப்படாத நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
- படிவம்–அ (இணைப்பு–I)ல் கண்ட நிபந்தனைகளை திருப்தி செய்தல் வேண்டும்.

இணைப்பு–V

போக்குவரத்து விளக்குகள் மற்றும் சைகைகள் (குறிகள்)



சிவப்பு

நிறுத்தக் கோட்டிற்குள் நிற்கவும்



இளம் மஞ்சள் & சிவப்பு

நிறுத்தக் கோட்டிற்குள் நிற்கவும்





பச்சை

விரைந்து செல்லவும்



இளம் மஞ்சள்

நிறுத்தக் கோட்டைக் கடந்த வாகனங்கள் தவிர பிற வாகனங்கள் நிறுத்தப்பட வேண்டும்



பச்சை அம்புக்குறி

அம்புக்குறி காட்டும் திசையில் செல்லவும்

போக்குவரத்து காவலரின் கை சைகைகள்



பின்னாலிருந்து
வரும் வாகனங்கள்
நிற்க

முன்னால்
வரும் வாகனங்கள்
நிற்க



ஒரே நேரத்தில்
முன்னாலும் பின்னாலும்
வரும் வாகனங்கள்
நிற்க



இடது புறத்திலிருந்து
வந்து வலது புறம்
திரும்பும் வாகனங்கள்
நிற்க



வலதுபுறத்திலிருந்து வரும்
வாகனங்கள் நிற்க. இடது
புறத்திலிருந்து வலது புறம்
திரும்பும் வாகனங்கள்
செல்லவும்



வலதுபுறம் வரும்
வாகனங்கள் நிற்க.
இடது புறத்திலிருந்து
திரும்பிச்செல்லும்
வாகனங்களும் நிற்க



அனைத்து
வாகனங்களும் நிற்க
எச்சரிக்கை சைகை



இடது புறத்திலிருந்து
வரும் வாகனங்களை
கையசைத்து அழைத்தல்



வலது புறத்திலிருந்து
வரும் வாகனங்களை
கையசைத்து அழைத்தல்



முன்புற வாகனங்களை
கையசைத்து
அழைத்தல்

ஓட்டுநரின் சைகைகள்



வலது புறம் திரும்ப

வலது புறங்கையை வெளியில் நீட்டி
உள்ளங்கை முன்புறம் இருக்குமாறு
படுக்கையாக விரைவாக நீட்டவும்



இடது புறம் திரும்ப

வலது புறங்கையை வெளியில் நீட்டி
கடிகாரச் சுற்றுக்கு எதிராக சுற்றவும்



வேகம் குறைக்க

வலது புறங்கையை வெளியில் நீட்டி
உள்ளங்கையை கீழ்ப்புறம் பார்த்தவாறு
மேலும், கீழும் அசைக்கவும்



சந்தியில் நிற்க

வலது புறங்கையை வெளியில் நீட்டி
முழங்கையை மேற்புறம் மடக்கி உள்ளங்கை
முன்புறம் பார்த்தவாறு நிறுத்தவும்



முன்னேறிச் செல்ல

வலது புறங்கையை நீட்டி தோள்களுக்குத்
தாழ்வாக முன்னும் பின்னும் அசைக்க

<u>இணைப்பு–VI</u>

கட்டாய போக்குவரத்து சைகைகள்



நிறுத்து



வழிவிடு

அனைத்து கட்டாய சைகைகளும் வட்ட வடிவிற்குள் குறிப்பிடப்பட்டிருக்கும். இதனை மீறுவது சட்டப்படி குற்றம்.

நேராகச் செல்ல தடை

ஒரு வழிப் பாதை

இரு வழிப் பாதை தடை

அனைத்து வாகனங்களுக்கும் தடை

கனரக வாகனம் தடை

மாட்டு வண்டி தடை

குதிரை வண்டி தடை

கைவண்டி தடை

மிதிவண்டி தடை

பாதசாரி தடை

வலது புறம் திரும்ப தடை

இடதுபுறம் திரும்ப தடை

U திரும்பல் தடை

முன்னேறிச் செல்ல தடை

ஒலிப்பான் தடை

மாட்டு வண்டி
மற்றும் கைவண்டிகள்
தடை

நீள எல்லை

வேக எல்லை

எடை எல்லை

உயர எல்லை



அகல எல்லை



அச்சு எடை எல்லை



கட்டுப்பாடு
முடிவுக்குறி



வாகனம்
நிறுத்தக்கூடாது



நிறுத்த / நிற்கக்
கூடாது

நேரே செல்க

இடதுபுறமாக
செல்க

இடதுபுறம்
திரும்புக



வலதுபுறம்
திரும்புக

வலதுபுறத்
திருப்பம் வருகிறது

இடப்புறத்
திருப்பம் வருகிறது

நேரே செல்ல அல்லது
இடதுபுறம் திரும்ப

நேரே செல்ல அல்லது
வலதுபுறம் திரும்ப

மிதிவண்டிப் பாதை

ஒலிப்பான்
பயன்படுத்தவும்

முக்கோண வடிவிலான சைகைகள் (குறிகள்)
சாலை உபயோகிப்பாளருக்கு சாலை பாதுகாப்பு ஆகும்.


பொது வடிவம்

வலதுபக்க வளைவு

இடதுபக்க வளைவு

வலதுபக்க கொண்டை ஊசி வளைவு

இடதுபக்க கொண்டை ஊசி வளைவு

வலது ஒதுங்கிய வளைவு

இடது ஒதுங்கிய வளைவு

உயர்ந்த மேடு

ஆழ்ந்த தாழ்வு

ஒடுங்கிய சாலை

அகல பாதை

குறுகிய பாலம்

வழுக்கும் சாலை

[illegible]

மிதிவண்டி கடக்கும் இடம்

பாதசாரி கடக்குமிடம்

பள்ளி அருகில்

ஆட்கள் வேலை செய்கிறார்கள்

விலங்குகள்

பாறைகள் விழுமிடம்

படகு மூலம் ஆற்றைக் கடக்குமிடம்

குறுக்குச் சாலை

சாலைதடுப்பு
இடைவெளி

வலது ஓரச் சாலை

இடது ஓரச் சாலை

Y பிரிவு

Y பிரிவு

Y பிரிவு

T பிரிவு

விடுபட்ட பிரிவு

விடுபட்ட பிரிவு

முக்கிய சாலை
சந்திப்பு

முக்கிய சாலை
சந்திப்பு

சுற்றுச்சாலை

அபாயகரமான பள்ளம்

கடின சாலை

தடை அருகில்



200 மீட்டர்
அருகில்



50–100 மீட்டர்
சமவெளி &
30–60 மலைப்பகுதி



200 மீட்டர்
அருகில்



50–100 மீட்டர்
சமவெளி &
30–60 மலைப்பகுதி

இணைப்பு–VII

தகவல் குறிகள்

நெடுஞ்சாலையில் உள்ள வசதிகள் மற்றும் நிறுத்தம் பற்றிய
அறிவிப்புக் குறியீடுகள் நீல வண்ண பின்னணியில்

பொது தொலைபேசி


பெட்ரோல் பங்க்


மருத்துவமனை


முதலுதவி


சாப்பிடும் இடம்

சிற்றுண்டி


ஓய்வெடுக்கும் இடம்


சாலை இல்லை



ஒருபக்க நிறுத்தம்



[illegible]
இல்லை



இருபுற நிறுத்தம்



இருசக்கர மோட்டார் வாகன நிறுத்தம்

மிதிவண்டி நிறுத்தம்



வாடகை வண்டி நிறுத்தம்



ஆட்டோ நிறுத்தம்

நுகர்வோர் மன்ற உறுதி மொழி

- நுகர்வோர் மன்ற உறுப்பினரான நான், என்னை இந்திய நுகர்வோர் இயக்கத்தில் முழு மனதோடு, முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதோடு, நுகர்வோருக்குரிய எட்டு உரிமைகளைப் பெறப் பாடுபடுவேன்.

- நான் நுகர்வோருக்குரிய உரிமைகளைப் பாதுகாக்க உதவுவதோடு, அவர்களுக்குரிய பொறுப்புகளையும் நினைவுறுத்துவேன்.

- நான் விழிப்புணர்வு மிக்க நுகர்வோராக இருப்பதோடு, வியாபார நிறுவனங்களால் பிற நுகர்வோரும் பாதிக்கப்படாமல் பாதுகாப்பேன்.

- நான், சிறந்ததும், பாதுகாப்பானதுமான பொருட்களையே வாங்குவேன்.

- இந்தியாவின் இளைஞர்களின் பிரதிநிதியான நான், ஆரோக்கியமான மற்றும் நிலைத்த தன்மை வாய்ந்த நுகர்வுக்காகப் பாடுபடுவேன்.

- நுகர்வோருக்குப் பயனுள்ளதும், நிலைத்த தன்மை வாய்ந்த நுகர்வுக்கு வழிவகுக்கும் விதிகளைப் பின்பற்றக்கூடிய சமூகத்தை உருவாக்கப் பாடுபடுவேன்.

- விழிப்புணர்வுமிக்க நுகர்வோர் சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் அதிசிறந்த இந்தியாவை உருவாக்க – அறிந்திருந்தும், விழிப்புடனிருந்து செயல்படுவதையும் என்னுடைய குறிக்கோளாகக் கொண்டுள்ளேன்.